

# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - OCTOBER 2025
VOL. 23 ISSUE 7 - 36 PAGES - Rs. 21/-

அக்டோபர் 2025

**உள்ளே...**

நீங்கள் வறண்டுபோயிருக்கிறீர்களா?
நான் வெறுமையாக உணர்கிறேன், ஏன்?
செம்மையானவனுடைய முடிவு சமாதானம்!

## சத்தியத்தையும் அறிவீர்கள், *சத்தியம் உங்களை* விடுதலையாக்கும்

(யோவான் 8:32)



# நீங்கள் வறண்டுபோயிருக்கிறீர்களா?

அன்பானவர்களே, "**ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம்பண்ணுவார்**" (சங்கீதம் 46:4,5) என்பதே இம்மாதத்திற்கு தேவன் தரும் வாக்குத்தத்தமாகும்.

தேவன் எந்த நதியைக் குறித்துப் பேசுகிறார்? நீங்கள் நதியில் இருக்கிறீர்கள்; உங்களுக்குச் சகாயம்பண்ணும்படியாக அதிகாலையில் தேவன் உங்கள் நடுவில் இருக்கிறார். நீங்கள் வறண்டு போயிருக்கிறீர்களா? அநேக வேளைகளில் நம் வாழ்க்கையில் துக்கத்தின் இரவுகளை அனுபவிக்கிறோம். பயங்கரமான பயம் நிறைந்த இரவுப்பொழுதுகள். எங்கு பார்த்தாலும் இருள் சூழ்ந்திருக்கும், வெளிச்சமே தென்படாத இரவுகள். ஆனால், அதிகாலையைக் காணும்படி நம்மை காத்துக்கொள்கிறார்; ஆகவே, தைரியமாயிருங்கள்.

## ஆனந்தத்தின் நதி

தேவனுடைய நகரத்தில், தேவன் வாசம்பண்ணும் இடத்தில், தேவனுடைய பரிசுத்த வாசஸ்தலத்தில் சந்தோஷத்தின் நதியாக இருக்கும்படி கர்த்தர் உங்களை உருவாக்கியிருக்கிறார் (சங்கீதம் 46:4).

தேவனுக்கு சந்தோஷத்தை அளிக்க யாராலும் முடியுமா? தேவனுடைய நகரத்தை களிகூரப்பண்ண யாராலும் முடியுமா? ஆம், நீங்கள் அதற்கென்று தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறீர்கள். எப்படி?

ஒரு பாவி மனந்திரும்பும்போது பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் (லூக்கா 15:7). தேவ தூதர்களும் மகிழ்வார்கள். "**மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்**" (லூக்கா 15:10). நீங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுவின் பிள்ளையாக மாறும்போது, பரலோகம் மிகவும் களிகூரும். பாவத்தை விட்டு மனந்திரும்பி, இயேசுவை இரட்சகராக கொண்டு, பாவத்தை வெறுத்து நீதியாக வாழ்வதன் மூலம் நீங்கள் சந்தோஷத்தின் நதியாக மாற முடியும்.

ஒருவேளை நீங்கள், "என்னால் இந்தப் பாவப் பழக்கங்களிலிருந்து விடுபட முடியவில்லை. நான் எப்படி தேவனுக்கு சந்தோஷத்தை கொண்டுவர முடியும்?" என்று கேட்கலாம். வேதம், "இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" என்று சொல்லுகிறது (1 யோவான் 1:7). ஆகவே, "இயேசுவே, நீர் எனக்காக உம்முடைய ஜீவனை தந்தீர்; எனக்காக இரத்தம் சிந்தினீர். அந்த இரத்தத்தால் என்னுடைய பாவத்தை சுத்திகரியும்"



Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org
Pauldhinakaranofficial

என்று விசுவாசத்தோடு கேளுங்கள். ஆம், இளைய குமாரன், தன் தகப்பனிடம், "நான் பாவஞ்செய்தேன். எனக்கு உதவும்" என்று கெஞ்சியதுபோல கேளுங்கள்.

லூக்கா 15ம் அதிகாரத்தில், மனந்திரும்பிய குமாரன், "நான் பரத்திற்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாகவும் பாவஞ்செய்தேன். உம்முடைய குமாரனாக இருப்பதற்கு எனக்கு தகுதியில்லை. பாவிகளுடன், பாவத்தின் இருளில் என் வாழ்க்கையை வீணாக்கிப்போட்டேன். என்னை மன்னியும்" என்றான். ஆனால், தகப்பன் ஓடி வந்து அவனை கட்டியணைத்து, முத்தமிட்டு, மறுபடியும் தன் மகனாக்கிக் கொண்டார்.

மகன், "நீர் உம்முடைய வேலைக்காரர்களில் ஒருவனாக என்னை வைத்துக்கொண்டால் போதும்" என்றான். ஆனால், தகப்பன், மகனுக்குரிய வஸ்திரத்தை அவனுக்கு அணிவித்து, கொழுத்த கன்றை அடித்து, "எல்லோரும் புசித்து, விருந்துண்டு, நடனம் பண்ணுங்கள். இசை முழங்கட்டும். சந்தோஷத்துடன் கொண்டாடுங்கள்" என்றான். ஒரே ஒரு பாவி மனந்திரும்பினால், பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். இன்றைக்கு உங்கள் நிமித்தம் பரலோகம் களிகூரும்; உங்கள் வாழ்வு சந்தோஷத்தினால் நிறைந்திருக்கும்.

அவ்வாறே, நாம் மற்றவர்களுக்கு அவரை அறிவிப்போம்; அப்போது அவர்களும் மனந்திரும்புவார்கள். பின்பு, பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். மிகப்பெரிய எழுப்புதல் ஊழியரான சார்லஸ் ஃபின்னி, ஒருமுறை தன் நண்பர் ஒருவரை சந்தித்தார். அவர்கள் தொழிற்சாலையினூடாக நடந்து சென்றபோது, அங்கே தறி நெய்து கொண்டிருந்த ஒரு பெண்மணி, திடீரென்று அழுதார்கள். அவர்களைச் சுற்றிலுமிருந்தவர்கள் ஒவ்வொருவராக அழத்தொடங்கினார்கள். இறுதியில் முதலாளி, "ஃபின்னி அவர்களே, இது நடக்கும் என்பது எனக்குத் தெரியும். கிறிஸ்துவின் பிரசன்னம் உங்களுக்குள் இருக்கிறது. மக்களால் அதன் வலிமைக்கு முன்பு நிற்க முடியவில்லை. அவர்கள் இருதயங்கள் உணர்த்தப்படுகின்றன; அவர்கள் மன்னிப்புக்காக அழுகிறார்கள்" என்று சொன்னார். ஃபின்னி, ஒரு வார்த்தைகூட பேசவில்லை. ஆனால், அவரில் நிரம்பி வழிந்த தேவ பிரசன்னம் அங்கிருந்த அனைவரையும் உணர்த்தி, மறுரூபமாக்கியது. அன்பானவர்களே, கிறிஸ்துவின் பூரணம் உங்களில் வாசமாயிருக்கும்போது, அவரது சமுகம், இவ்வண்ணமாக உங்களில் நிரம்பி வழியும்.

ஆகவேதான் இயேசு ஜெபிக்கிற ஆண்களையும் பெண்களையும் தம் ராஜ்யத்தின் பணியில் பங்காளர்களாக, ஜெப வீரர்களாகும்படி அழைக்கிறார். நாம் இங்கே வருகிறவர்களுக்காக ஜெபிக்கிறோம்; சிலர் தங்கள் வீடுகளிலிருந்து எங்களோடு இணைந்து ஜெபிக்கிறார்கள். உங்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். நீங்கள் அதைச் செய்யும்போது, உங்கள் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். ஏழைப் பிள்ளைகள் பேரில் அக்கறை காட்டி, சீஷாவின் மூலம் நீங்கள் எங்களோடு இணைந்து சேவை செய்கிறீர்கள். அநேக பிள்ளைகள், ஸ்கூல் கிட்டுகள், இலவச டியூஷன் உள்ளிட்ட சீஷா வழங்கும் ஆதரவு மூலம் ஆசீர்வாதம் பெறுகின்றனர். எண்ணற்ற பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படுகின்றனர். நீங்களும் இதில் பங்கு பெறும்போதும், மற்றவர்களுக்கு ஆண்டவரை குறித்து சொல்லி நீங்கள் ஊழியம் செய்யும்போதும், பரலோகம் சந்தோஷத்தால் நிரம்பும்; கர்த்தரின் சந்தோஷம் உங்கள்மேல் வரும். "அவர் உன்பேரில் கெம்பீரமாய் களிகூருவார்" (செப்பனியா 3:17) என்று வேதம் கூறுகிறது. இது எவ்வளவு ஆச்சரியமானது! நீங்கள் அவருக்கு ஊழியம் செய்யும்போது, "என்னுடைய பிள்ளை மூலமாக இந்த மனுஷன் மனந்திரும்பினான். என்னுடைய அன்பு மகள் மூலமாக, இந்தப் பெண் மனந்திரும்பினாள். இவர்கள் மூலமாக இந்த ஏழைக் குழந்தை ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டது" என்று கூறுவார். அவர் உங்கள் பேரில் சங்கீதம் பாடுவார். நீங்கள் இரட்சிப்பை கொண்டு செல்லும் நதியாக விளங்குவீர்கள்.

**தேவனுடைய நகரத்தில், தேவன் வாசம்பண்ணும் இடத்தில், தேவனுடைய பரிசுத்த வாசஸ்தலத்தில் சந்தோஷத்தின் நதியாக இருக்கும்படி கர்த்தர் உங்களை உருவாக்கியிருக்கிறார்**

## ஜீவத்தண்ணீருள்ள நதி

இயேசு, "**என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்**" (யோவான் 7:38) என்று கூறுகிறார். ஆம், அவர் நம்மை ஜீவத்தண்ணீருள்ள நதியாக மாற்றுகிறார். ஆனால், இயேசுவின் இரண்டு சீஷர்களின் தாய், ஆண்டவர் இயேசுவிடம், "ஆண்டவரே, நீர் மகிமையில் வரும்போது, என்னுடைய குமாரரில் ஒருவன் உம் சிங்காசனத்தின் வலப்பக்கத்திலும், ஒருவன் உம் இடப்புறத்திலும் இருக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். இயேசு, "நீ கேட்பது இன்னது என்று அறியாதிருக்கிறாய். நான் குடிக்கும் பாத்திரத்தில் உன்னால் பானம் பண்ணமுடியுமா? உன்னால் குடிக்க முடியுமானால், என்னோடு சிங்காசனத்தில் உட்கார முடியும்" என்று பதில் கூறினார்.

இயேசு, எந்தப் பாத்திரத்தில் குடித்தார்? அது மரணத்தின் பாத்திரம். அவர், "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீயும் குடித்தால் ஜீவனைப் பெற்றுக்கொள்வாய். ஜீவிக்கிற தேவனாகிய என்னுடன் ஆளுகை செய்வாய். நித்திய ஜீவனின் சுதந்தரராய் மாறுவாய். இந்த உலகிலும், வரும் உலகிலும் வாழ்வாய்" என்று கூறினார். ஆனால், இயேசு, பானம் பண்ணிய மரணத்தின் பாத்திரம் எது? அவர் ஜீவனுள்ளவராயிருந்தாலும், தம்மை தம் பிதாவுக்கும், மரணத்திற்கும் ஒப்புக்கொடுத்தார். எந்த நோக்கத்திற்காகக் கொடுத்தார்? ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மனுஷிக்காகவும் மரணத்தை ருசி பார்ப்பதற்காக ஒப்புக்கொடுத்தார். எல்லா மனுஷரும் பாவத்திற்குள்

இருந்தார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தின் பிடியிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக, இயேசு மரணத்தின் வழியாக சென்றார். அவர், மரணத்தின் வழியாக சென்றதால், நமக்கு ஜீவனை தந்து, ஜீவத் தண்ணீருள்ள நதியாக நம்மை மாற்றுவார்.

இன்றும் ஆண்டவர் மரணத்தின் பாத்திரத்தை பல வேளைகளில் தருகிறார். பவுல், ‘‘நான் பலவீனமாயிருக் கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்’’ (2 கொரி. 12:10) என்று கூறுகிறான். ‘‘கிறிஸ்துவினிமித்தம் பலவீன மும், நிந்தையும், நெருக்கமும், துன்பமும், இடுக்கண் ணும் வரும்போது நான் திடமாயிருக்கிறேன். பிறகு ஜீவனைப் பெற்றுக்கொள்கிறேன். மறுபடியும் பலத்துடன் எழும்புகிறேன்’’ என்கிறான்.

பலவேளைகளில் நாம், ‘‘நான் இயேசுவிடம் வந்து விட்டேன். இன்னும் எனக்கு ஏன் பாடுகள்?’’ என்று கேட்கிறோம். ஒரு சகோதரி தன் சாட்சியை பகிர்ந்து கொண்டபோது, ‘‘எனக்கு பிரச்னைகள் இருந்தன. என் உடலில் வியாதி இருந்தது. ஆனால், அவை எல்லாவற் றின் மத்தியிலும் ஆண்டவரை பிடித்துக்கொண்டேன். அவர் என்னை ஜீவனோடு காத்தார். என் பிள்ளைகளை பாதுகாத்தார். ஆத்துமாவில், வாழ்க்கையில், குடும்பத்தில் எல்லா விதங்களிலும் நான் ஆசீர்வாதத்தை பார்க்கி றேன். ஆனாலும், தம் சித்தத்தை நிறைவேற்றும்படி ஆண்டவர் என்னை அடிக்கடி மரணத்தின் பாதையில் நடத்துகிறார்’’ என்று கூறினார்கள்.

ஆண்டவர் ஏன் அப்படிச் செய்யவேண்டும்? ஏனென் றால், அந்தப் பாதையில்தான் நம்முடைய மனுஷீக சுபாவம் நம்மை விட்டுச் செல்லும். நம் பெருமை, ஒழுங்கின்மை, அகந்தை மறையும், கோபம் அகற்றப் படும். எரிச்சல் மங்கி நாம் இயேசுவைபோல் மாறுவோம்.

என் தந்தை, ‘‘தொழிற்சாலையில் எஃகு குழாய்கள் தயாரிக்கப்படும்போது, வெளிப்புறம் அழகாக தோற்றமளிக் கும். ஆனாலும், அவை அமில தொட்டிக்குள் போடப்படும். ஏன் தெரியுமா? அவை வெளியே அழகாக இருந்தாலும், அவற்றை நெருக்கமாக சோதிக்கும்போது பல உலோகங் கள் அவற்றின்மீது இருக்கும். அமிலம் மட்டுமே அவற்றை அகற்றும். பிறகு குழாய்களின் பெறுமதி மிகவும் அதிகரிக்கும்’’ என்று அடிக்கடி சொல்லுவார்.

அவ்வண்ணமாகவே, ஆண்டவர் நம்மை அடிக்கடி அமில தொட்டிக்குள் போடுகிறார். உலகத்தின் நெருக்கங் கள் நம்மேல் வருகிறது. அது பவுல் எழுதுகிறதுபோல, பலவீனமாக, நிந்தையாக, துன்பமாக, உபத்திரவமாக, நெருக்கமாக இருக்கலாம். ஆனால் அவ்வேளைகளில், ஆண்டவரின் ஜீவன் நமக்குள் வருகிறது. அமிலம் போன்ற வாழ்க்கை நம்மை சுத்திகரிக்கிறது. மற்றவர் களுக்கு இந்த நம்பிக்கை இல்லை. ஆனால், நமக்குள் ஜீவன் இருக்கிறது. ஆகவேதான் இயேசு, ‘‘என்னை விசு வாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்’’ (யோவான் 11:25,26) என்று கூறுகிறார். ஆகவே, ஒவ்வொருமுறையும் உபத்திரவங் கள் வரும்போது, ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம், ஜீவத்தண்ணீருள்ள நதிகள் பாயப்போகின்றன என்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஆகவே இயேசுவைபோல, ‘‘ஆண்டவரே, உம் சித்தம் ஆகக்கடவது’’ என்று சொல்ல வேண்டும்.

பலவேளைகளில் ஆண்டவர் எனக்கு தீர்க்கதரிசனங் களை கொடுக்கிறார். ‘‘இது நடக்கும். நான் இதைச் செய்யப்போகிறேன்’’ என்பார். ஆனால், தீர்க்கதரிசனம் வந்ததும் பிரச்னைகள் எழும்பும். உபத்திரவங்கள் வரும். துரோகங்கள் நடக்கும். பொய்யான குற்றச்சாட்டுகள் வரும். நிந்தைகள் வரும். நான், ‘‘ஆண்டவரே, நீரே பெரிதான, மகிமையான காரியங்களை என் மூலமாக செய்யப்போகிறேன் என்றீர். ஆனால், இப்போது இருக்கும் சூழ்நிலையில் எதுவுமே சாத்தியமில்லாததுபோல் இருக்கிறது. ஆண்டவரே, உம் சித்தம் நடக்கட்டும். உம் மகிமைக்காகவே இது நடக்கிறது என்பதை அறிந்திருக் கிறேன். நீர் திட்டமிட்டவற்றை நிறுத்த முடியாது என்பது எனக்குத் தெரியும். நீர் சர்வவல்லவர். நீர் கூறியவை நிச்சயமாக நிறைவேறும்’’ என்று கூறுவேன். என்ன ஆச்சரியம்! என்னை கட்டியிருக்கும் எல்லா சங்கிலியும், என்னை தடுக்கும் எல்லா தடையும் ஆண்டவரால் அகற்றப்படும். அவர் வாசல்களை அகலமாக திறப்பார்; மகிமையான வெற்றிகளை தருவார். மெய்யாகவே ஊழியத்திலும், காருண்யாவிலும், சீஷாவிலும் ஆண்டவ ரின் கிரியைகளை நாங்கள் பார்ப்போம்.

ஆண்டவர் இயேசு, ‘‘ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின் பற்றக்கடவன்’’ என்று கூறினார். யோபு, ‘‘அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கை யாயிருப்பேன்’’ என்று கூறினான். கர்த்தரின் கரம் அழியும்படியாக அவனை சாவுக்கு ஒப்புக்கொடுத்ததா? இல்லை! கர்த்தர், அவனை எழுப்பினார். அவன் இழந்தவை எல்லாவற்றையும் இரட்டிப்பாக திரும்ப கொடுத்தார். கர்த்தர் அவ்வாறே உங்களுக்கும் செய்வார். கிறிஸ்துவுக்காக நீங்கள் இன்றைக்கு நிந்திக்கப்பட்டீர்களா? கிறிஸ்துவின் நாமத்தை சுமப்பதால் உங்களுக்கான ஆசீர்வாதங்கள் தாமதிக்கின்றனவா? கர்த்தரை ஸ்தோத் திரியுங்கள். இதன் மூலமாக கர்த்தர் உங்களை தம்மை போல மாற்றுவார். அவரது சித்தத்தை நீங்கள் நிறை வேற்றுவீர்கள். அவர் ஒருபோதும் உங்களை மரணத் திற்கு ஒப்புக்கொடுக்கமாட்டார். மாறாக, அவர் உங்களை உயர்த்துவார்; மரணத்திலிருந்து எழுப்புவார்; அவர் ஜீவத்தண்ணீருள்ள நதிகளை அனுப்புவார்.

## சமாதானத்தின் நதி

சமாதானத்தை நதிபோல ஓடிவரப்பண்ணுவதாக கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார் (ஏசாயா 48:18). வேதம், **‘‘யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர் களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும்**

**கர்த்தரைத் தரிசிப்பதில்லையே**'' (எபிரெயர் 12:14) என்று சொல்லுகிறது. ஆம், நீங்கள் யாவரோடும் சமாதானமாக வாழும்போது, தேவனை பார்க்கும்படியான பரிசுத்தம் உங்கள்மேல் வரும்; உங்களைச் சுற்றியிருக்கும் மக்களுக்கு சமாதானத்தை கொண்டுவரும் நதியாக நீங்கள் மாறுவீர்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு சகோதரி என்னிடம் வந்து, ''சகோதரரே, உங்களைப் பற்றி மக்கள் என்ன பேசுகிறார்கள் தெரியுமா? உங்களைக் குறித்து, உண்மையல்லாத காரியங்களை பரப்புகிறார்கள்'' என்று கூறி பட்டியலிட்டார்கள். ''நீங்கள் இவற்றுக்கு பதில் ஒன்றும் கூறுவதில்லையா? உங்களைக் காத்துகொள்ள வில்லையா?'' என்று கேட்டார்கள். நான், ''ஆண்டவர், மக்களோடு போராட என்னை உயிரோடே வைத்திருக்க வில்லை. ஓடுகிற நதியாகவும், ஜீவனை கொடுப்பதற்கும் என்னை வைத்திருக்கிறார். இந்த உலகத்தில் ஒருவர்கூட கெட்டுப்போகக் கூடாது. எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும். அனைவரும் இயேசுவின் பிள்ளையாக வேண்டும். எல்லோரும் ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கூறினேன்.

யூதாஸ் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவரைக் காட்டிக்கொடுத்தான். இன்றும் அநேகர் பணத்திற்காக இயேசுவையும் அவருடைய பிள்ளைகளையும் காட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால், இயேசு என்ன சொன்னார்? ''எனக்குப் பிரியமான சிநேகிதனே!'' அப்போதும் அவர் ''சிநேகிதனே'' என்று அவனை அழைத்தார். இயேசு, யூதாஸுடன் சமாதானமாக இருந்தார். இயேசு ஒரு போதும் அவனை சபிக்கவில்லை; அவனை அழிக்க வில்லை. யூதாஸே தன்னை தானே மாய்த்துக் கொண்டான்.

ஆண்டவர் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக் கும்படி நம்மை அழைத்திருக்கிறார். நாம் அப்படிச் செய்தால் சமாதானப் பிரபு நம் வீட்டுக்கு வருவார். எப்பக்கமும் எதிர்ப்பு எழுந்தாலும், கணக்கற்ற தாக்குதல் கள் வந்தாலும், அவர் உங்கள் குடும்பத்தை சமாதானத் தில் நிலைப்படுத்துவார்.

நான் முதன்முறையாக என் அப்பா மூலம் ஊழியத்தை ஆரம்பித்தபோது, ஆண்டவர் என்னிடம், ''என் மகனே, நீ பிரசங்கிக்கச் செல்லும்போது, உன் உள்ளத்தில் பயமிருக்க அனுமதிக்காதே. யார் மேலும் கசப்பு உன் இருதயத்தில் இருப்பதற்கு அனுமதிக்காதே. நீ கசப்பை சுமந்துசென்றால், மக்களுக்கு கசப்பையே கொடுப்பாய். பயத்தை சுமந்தால், பயத்தையே கொடுப் பாய். ஆனால், சமாதானத்தை கொடுக்கும்படி உன்னை அழைத்திருக்கிறேன். என்னுடைய ஜீவனை கொடுப்ப தற்கு உன்னை அழைத்திருக்கிறேன். எந்தச் சூழ்நிலை யிலும் சமாதானப் பிரபுவாக என்னை உணரும்போது நான் உன்னுடன் இருப்பேன். என்னுடைய முகத்தை பார். என் சந்தோஷத்தை அனுபவி. எந்த மனுஷனின் கசப்போ, விரோதமோ, பொறாமையோ உன்னை தொடாது. மாறாக, நீ என் சமாதானத்தை அனுப்புவாய். என் ஜீவனை அனுப்புவாய்'' என்று கூறினார். நான் அப்படியே வாழ்கிறேன். எதிர்ப்பு பெரிதாக எழும்ப எழும்ப ஆண்டவர் இன்னும் அதிகமாக என்னை ஆசீர்வதிக் கிறார்; உயரே உயர்த்துகிறார்.

**இயேசு, மரணத்தின் வழியாக சென்றதால், நமக்கு ஜீவனை தந்து, ஜீவத்தண்ணீருள்ள நதியாக நம்மை மாற்றுவார்**

## பேரின்ப நதி

**''உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தி யடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்'' (சங்கீதம் 36:8)**


**''அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறை வேற்றுவாராக'' (சங்கீதம் 20:4)**

இன்றைக்கு ஆண்டவர் உங்கள் தாகத்தைத் தீர்ப்பார். உங்கள் ஏக்கம் எதுவாக இருந்தாலும் அவர் அதை திருப்தியாக்குவார். அவர் தம்மைத்தாமே உங்களுக்கான சந்தோஷத்தின் நதியாக உருவாக்குவார்; மற்றவர்களுக்கு நித்திய சந்தோஷம் தரும் நதியாக உங்களை மாற்றுவார்.

**''நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழு வான்''** (நீதிமொழிகள் 23:24). தேவன் உங்கள் பிள்ளைகளுக்கு ஞானத்தை அளித்து, தமது பேரின்பத்தில் மூழ்கியிருக்கும்படி செய்வார்.

தேவன் தரும் அந்த ஆசீர்வாதம் உங்கள் சத்துருக் களை அழிக்கும் அல்லது உங்கள் பிள்ளைகளை காப்பாற்றும். இன்றைக்கு ஆண்டவர் உங்களை ஆசீர்வதிக்க பிரியமாயிருக்கிறார். நீங்கள் அதை நம்பு கிறீர்களா? அப்படியானால், உங்கள் அதிகாரிக்கு, உடன் வேலை செய்கிறவர்களுக்கு, உங்களுக்கு விரோதமாக மக்கள் கொண்டுவரும் புகாருக்கு பயப்படாதிருங்கள். ''அவனுக்கு திரும்ப கொடுப்பேன்'' என்று சொல்லாதிருங் கள். அதை ஆண்டவரிடம் விட்டுவிடுங்கள். சமாதானமே உங்களில் இருக்கவேண்டும். எல்லோருடனும் சமாதா னம். உங்கள் மூலமாக உலகத்தினுள் சமாதானம் வர வேண்டும். சமாதானப் பிரபு உங்கள் மூலமாக வெளிப்பட வேண்டும். நீங்கள் சமாதானத்தின் நதியாக இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். சமாதானத்தின் நதி, ஜீவனின் நதி, சந்தோஷத்தின் நதி உங்கள் மூலமாக பாய்ந்து செல்லும்போது, உங்கள் வாழ்க்கை நிலைப்படும். நீங்கள் அசைக்கப்படுவதில்லை. தேவன் உங்கள் நடுவே இருப்பார். இந்த மாதமும், வாழ்நாள் பரியந்தமும் இந்த கிருபையை அனுபவிப்பீர்களாக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# அற்புதங்களின் வாசல்



## பெதஸ்தா ஜெப மையம்

பெதஸ்தா ஜெப மையம், தேவனால் அவரது பிரசன்னம் விளங்கும்படி தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்தலமாகும். யோவான் 5ம் அதிகாரத்தில் காணப்படும் வியாதியஸ்தர் சுகம் பெறும்படி வந்த பெதஸ்தா குளத்தைப் போல, உள்ளத்தில் ஏக்கமுடையவர்கள் திரளானோர் இங்கு வருகின்றனர். நாட்டின் எல்லா பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் ஒரு அற்புதத்தை எதிர்பார்த்து அல்லது வாழ்வின் தேவைக்காக பெதஸ்தாவுக்கு வருகின்றனர். இங்கு ஏறெடுக்கப்படும் எந்த ஜெபத்திற்கும் பதில் கிடைக்காமல் போனதில்லை. கடந்த ஆண்டு மட்டும் 7,333 சாட்சிகள் வந்துள்ளன.

பெதஸ்தா, தமிழ்நாட்டின் 31,59,000 மக்கள் வசிக்கும் பெரிய நகரங்களுள் ஒன்றான தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோயம்புத்தூர் அருகே காருண்யா நகரில், இயற்கை அழகு மிக்க சூழலில் அமைந்துள்ளது. இது துணி, பொறியியல், கல்வி, ஆரோக்கியம் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் முக்கிய மையமாக விளங்குகிறது. ஆனாலும், மக்களின் குழந்தை பாக்கியம், திருமணம், குடும்ப ஆசீர்வாதம், பிள்ளைகளின் எதிர்காலம், விசா, பணியிடமாற்றம், மாணவர் சேர்க்கை, கடனிலிருந்து விடுதலை, வியாபாரத்தில் நஷ்டம், வேலையின்மை, படிப்பினால் ஏற்படும் அழுத்தம், மனச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள், அடிமைத்தனங்கள், நாள்பட்ட வியாதி, தனிமை, சொத்து தகராறுகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகள், குடும்பத்தில் உடைந்த உறவுகளை சீர்ப்படுத்துதல், குடும்ப உறுப்பினர்களின் இரட்சிப்பு இன்னும் இதுபோன்ற பொதுவான ஜெப குறிப்புகள் வருகின்றன.

பெதஸ்தா, அங்கு வருவோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்புகொள்வோருக்கும் நம்பிக்கையளிக்கும், சுகமளிக்கும், மறுரூபமாக்கும் அனுபவத்தைக் கொடுக்கும் பரிசுத்த ஸ்தலமாக விளங்குகிறது. கடந்த 32 ஆண்டுகளாக தேவனுடைய அற்புத வல்லமையினால் கணக்கற்றோர் வாழ்க்கை ஆசீர்வாதம் பெற உதவியுள்ளது.



## தமிழ்நாட்டை சேர்ந்த சகோதரர் ராஜனின் சாட்சி:

பல ஆண்டுகளாக நான் வாழ்க்கை துணையைத் தேடி அலைந்தேன். ஆனால், எல்லா இடத்திலும் தடை காணப்பட்டது. கடைசியில் நான் இருதய அறுவை சிகிச்சை செய்த ஒரு பெண்ணை திருமணம் பண்ணினேன். குழந்தையே இருக்காது என்றும் கூறினார்கள். உறவினர்கள் எங்கள் எதிர்காலம் குறித்து சந்தேகப்பட்டனர். எங்கள் திருமணம் முடிந்த பிறகு பெதஸ்தாவிற்கு சென்று, எங்கள் வாழ்க்கை ஆசீர்வாதமாக அமைய வேண்டும் என்று ஜெபித்தேன். எல்லோருடைய ஆச்சரியத்துக்கு ஏதுவாக அந்த மாதமே என் மனைவி கருத்தரித்தாள். மருத்துவர்கள் உயிருக்கு அச்சுறுத்தலான பிரச்னைகள் வரும் என்று எச்சரித்தனர். ஆனால், நான் பெதஸ்தா ஜெப மையத்தை தொடர்பு கொண்டபோது, ஒரு ஜெப வீரர், கவலைப்பட வேண்டாம் என்று கூறினார். ஆண்டவர் எங்கள் ஜெபத்திற்குப் பதில் அளித்து அழகிய பெண் குழந்தையை கொடுத்து எங்களை ஆசீர்வதித்தார்.

---

**இதுபோன்ற வாழ்க்கையை மாற்றும் அற்புதங்கள் பெதஸ்தாவுக்கு வருகிற, தொலைபேசி மூலம் தொடர்புகொள்கிற அனைவருக்கும் நடக்கின்றன.**

## பெதஸ்தா ஜெப மைய ஊழியத்தில் பங்காளராக அழைப்பு

2024 ஏப்ரல் முதல் 2025 மார்ச் வரை பெதஸ்தா ஜெப மையம் 2,56,400 ஆத்துமாக்களுக்கு ஊழியம் செய்துள்ளது. ஒவ்வொருவரும் தேவ தொடுதலை அனுபவித்துள்ளனர். அதனுடன் கோயம்புத்தூரிலுள்ள 31,59,000 மக்களை, வருகிற அனைவரையும் தொடுவதற்கு பெதஸ்தாவுக்கு மாதந்தோறும் 600 தன்னார்வ ஜெப வீரர்கள், 100 ஸ்தானாபதிகள், ஆராதனை செய்யக்கூடிய 300 தன்னார் வலர்கள் தேவை.







### இதற்கு உங்கள் ஜெபமும் உதாரத்துவமான ஆதரவும் தேவை.

உற்சாகமான உங்கள் உதவி, ஊழியத்தை தாங்கவும், விரிவாக்கவும், ஒவ்வொரு ஆத்துமாவும் சுகம், விடுதலை, வாழ்க்கையை மாற்றும் இயேசுவின் தொடுதலை அனுபவிக்க உதவும்.

DONATE TO BETHESDA

### நீங்கள் எப்படி உதவலாம்?

1 ஆத்துமாவை தொட்டு ஆசீர்வதிக்க ரூ.1,000 காணிக்கை வழங்கலாம்
100 ஆத்துமாக்களை தொட்டு ஆசீர்வதிக்க ரூ.1,00,000 காணிக்கை வழங்கலாம்
1,000 ஆத்துமாக்களை தொட்டு ஆசீர்வதிக்க ரூ.10,00,000 காணிக்கை வழங்கலாம்.

அல்லது ஆண்டவர் உங்களை வழிநடத்துகிறபடி, தேவனின் பணிக்காக www.jesuscalls.org/donate/Bethesda என்ற இணைப்பின் மூலம் நன்கொடை வழங்கி ஆதரிக்கலாம்.

குழுவாக வருகை தர மற்றும் முகாம்கள் நடத்த

உங்கள் திருச்சபை அல்லது குழுவை பெதஸ்தாவுக்கு அழைத்து வந்து முகாம் அல்லது ஆவிக்குரிய முகாம் நடத்தலாம்.

3 அல்லது 5 நாள்கள் உணவு, தங்குமிடம் உள்பட எல்லா செலவுகளையும் சேர்த்து நண்பர்கள், குடும்பத்தாருக்காக சுற்றுலா பதிவு செய்யலாம்.

பொறுப்பு: மேலாளர் - பெதஸ்தா ஜெப மையம்,

திறன்கள்: நிர்வாக அனுபவம் 10 ஆண்டுகள், வல்லமையான ஊழியம், அபிவிருத்தி மற்றும் நிதி திரட்டுதல், மார்க்கெட்டிங் திறன், பன்மொழி திறன்

விண்ணப்பிக்க: careers@jesuscalls.org

பெதஸ்தாவில் ஆலோசகராக, ஜெப வீரராக, இசை வாசிப்பவர்களாக, பாடகர்களாக சேவை புரிய அபிஷேகம் பெற்ற பன்மொழி தன்னார்வலர்கள் தேவை. பொது தங்குமிடம் (Dormitory) வழங்கப்படும்

பெதஸ்தாவுக்கு பதிவு செய்யவும், ஊழியம் செய்யவும் +91 98409 99917 என்ற எண்ணில் தொடர்புகொள்ளவும்.

பெதஸ்தாவின் மூலமாக பல லட்சம் பேரை ஆசீர்வதிப்பதில் நீங்கள் பங்காளராகும்போது ஆண்டவர் உங்களை பூரணமாக ஆசீர்வதிப்பார்.



# குறைவற்ற குடும்பம்

குடும்ப பகுதி

**"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" (சங்கீதம் 34:10)**

அன்பானவர்களே, தேவனை தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையுங்குறைவுபடாது என்று அவருடைய வார்த்தை நமக்கு உறுதி கூறுகிறது. மனுஷ ஞானம், ஐசுவரியம், சாதனைகள் திருப்தியை தரும் என்று வாக்குப்பண்ணலாம். ஆனால், கிறிஸ்து இல்லாத ஆத்துமா வெறுமையாய் காணப்படும். ராஜாங்கத்தின் பரிபூரணத்தையும், வனாந்தரத்தின் தனிமையையும் அனுபவித்த தாவீது, "கர்த்தர் என் மேய்ப்பராயிருக் கிறார்; நான் தாழ்ச்சியடையேன்" (சங்கீதம் 23:1) என்று நம்பிக்கையுடன் கூறுகிறான். உண்மையான திருப்தி, ஆஸ்திகளில் அல்ல; ஆண்டவரின் பிரசன்னத்திலேயே கிடைக்கும் என்பதை அவன் புரிந்திருந்தான். நீங்கள் கர்த்தரை தேடும்போது, உங்கள் தனிப்பட்ட தேவைகள், அன்பானோ ரின் ஆரோக்கியம், இரட்சிப்பு, ஆசீர் வாதம் மற்றும் குடும்பத்தின் பொரு ளாதார தேவைகள் உள்ளிட்ட வாழ் வின் எல்லா பகுதியிலும் அவரது பரிபூரணத்தை நாடுவீர்கள்.



சீனாவில் ஊழியம் செய்த China Inland Mission நிறுவனர் ஜேம்ஸ் ஹட்சன் டெய்லர் (1832-1905). எல்லாவற்றுக்கும் மேலாக இவர் கர்த்தரை தேடினதால், ஒன்றிலும் குறைவைக் காணாத மனிதராக திகழ்ந்தார். இளம் வயதிலிருந்தே அவர், தன் தேவைகளுக்கு தேவனை மாத்திரமே சார்ந்திருக்க தீர்மானித்திருந்தார். சீனாவுக்கு புறப்பட்டுச் செல்லும்முன்பே விசுவாசத்தில் வாழ்வதற்காக, தனக்குரிய ஊதியத்தை மறுத்தார்; ஜெபத்தின் மூலமாக தேவனே தேவைகளை அருளிச் செய்வார் என்றார்.

அவர் 1854ம் ஆண்டு சீனாவை அடைந்தபோது, உள்நாட்டுப் போர், நோய், பணக்கஷ்டம், வெளிநாட்டினர் சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்வதற்கு தடை உள்ளிட்ட பல சவால்களை சந்தித்தார். ஆனாலும், டெய்லர் ஒருபோதும் குறைவை பார்க்கவில்லை. மாறாக, தன்னை அழைத்த ஆண்டவரையே நோக்கிப் பார்த்தார்.

உணவு, நிதி குறைவுபட்ட நாட்கள் உண்டு. ஆனால், ஒவ்வொரு முறையும் தேவன் அவரது தேவைகளை சந்தித்தார். டெய்லர் எழுதிய, "தேவனுடைய வேலை,

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

## தேவனோடு நடக்கும் குடும்பமானது மெய்யாகவே குறைவுபட்டிருக்காது

தேவனுடைய வழியில் செய்யப்பட்டால், ஒருபோதும் அவரது ஆசீர்வாதம் குறையாது'' (God's work done in God's way will never lack God's supply) என்ற வாசகம் புகழ்பெற்றது. இது அவரது ஊழியத்தின் குறிக்கோள் அல்ல; உண்மையில் இப்படித்தான் வாழ்ந்தார்.

ஹட்ஸன் டெய்லருக்கு வேண்டிய பொருள்கள் மட்டும் கிடைக்கவில்லை; உபத்திரவங்களின் மத்தியிலும் அவரது குடும்பம் சமாதானமாக இருந்தது. அவருடைய மனைவி மரியா, அவருடன் உத்தமமாய் நின்றார்கள்; இருவரும் இணைந்து கிறிஸ்துவை கனப்படுத்தும் குடும்பத்தை கட்டியெழுப்பினார்கள். வியாதியினால் பிள்ளைகளை இழக்கக்கொடுத்த உள்ளத்தை உடைக்கும் சூழலிலும் தேவனுடைய தேறுதல், பெலன் குறைவுபடவில்லை; கிருபை அவர்களை தாங்கியது.

அவர் தொடங்கிய China Inland Mission என்ற ஊழியம் வளர்ந்தது. ஆயிரக்கணக்கான மிஷனரிகள் சீனாவுக்குள் அனுப்பப்பட்டு, பல லட்சம் பேர் தொடப்பட்டனர். இயேசு தமது சீஷர்களிடம், ''உங்களுக்கு ஏதாகிலும் குறைவாயிருந்ததா?'' என்று கேட்டபோது, ''ஒன்றும் குறைவாயிருந்ததில்லை'' என்று சீஷர்கள் கூறியதுபோல, டெய்லரும் சாட்சி கூறும் நிலை காணப்பட்டது (லூக்கா 22:35).

ஹட்ஸன் டெய்லருடைய வாழ்க்கை, கர்த்தருக்குப் பயந்து நீங்கள் அவரைத் தேடும்போது, அவருக்கு ஊழியம் செய்யும்போது, உங்களுக்கு ஒன்றுங்குறைவுபடாது என்பதை போதிக்கிறது. தேவன் உங்கள் தேவைகளை அருளுகிறவர் மட்டுமல்ல, மாறாக, உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் தாம் அழைத்த அழைப்பிற்கேற்ப தகுதியுள்ளவர்களாகவும் மாற்றுகிறவர்.

### போதுமானவற்றின் இரகசியம்

வேதம், இந்த சத்தியத்தை தொடர்ந்து வலியுறுத்துகிறது. ''நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்துதிரிகிறதையும் நான் காணவில்லை'' (சங்கீதம் 37:25). ஆம், கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு, அவருடைய வழிகளில் நடக்கிறவர்களுக்கு அவர் வேண்டியதை அருளிச்செய்கிறார். நீங்கள் முதலாவது இடத்தில் அவரை வைக்கும்போது, அவர் உங்கள் ஆத்துமாவை ஆசீர்வதிப்பதோடு, அன்றாட வாழ்வுக்குத் தேவையான லௌகீக ஆசீர்வாதங்களையும் தருவார். இயேசுவே, ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' (மத்தேயு 6:33) என்று வாக்குக்கொடுத்திருக்கிறார்.

### ஒப்பிட்டுப் பார்ப்பதிலிருந்து பாதுகாத்தல்

மற்றவர்களோடு தங்கள் குடும்பத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதே அநேக விசுவாசிகள் எதிர்கொள்ளும் சோதனையாகும்; அதுவே ஒரு தடையுமாகும். பெரும்பாலும் நாம் அக்கம்பக்கத்தவர் அல்லது நண்பர்களின் ஆசீர்வாதங்களைப் பார்த்து, ''அவர்களுக்கு இருக்கிறது; எனக்கு ஏன் இல்லை?'' என்று பார்க்கிறோம். ஆனால், நமக்கான தேவனுடைய திட்டம் தனித்துவமானதாக இருக்கிறது.

என்னுடைய ஊழியத்தின் ஆரம்ப கட்டங்களில், வல்லமையான பிரசங்கியாரான என் கணவரைப் போலவே என்னையும் தேவன் பயன்படுத்தவேண்டும் என்று ஜெபிப்பேன். அவருடைய மாதிரியை என்னுடைய மெல்லிய குரலுடன் ஒப்பிட்டு, இது போதாது என்று எண்ணுவேன். ஆனால், தீர்க்கதரிசனம் உரைக்கும் ஒரு பெண்மணி, ''உங்கள் கணவரின் மாதிரியை அல்ல; உங்களுக்கென்று ஒரு மாதிரியை ஆண்டவரிடம் கேளுங்கள்; அவர், உங்கள் குரலையும் அழைப்பையும் குறித்து ஒரு நோக்கத்தை, விசேஷித்த திட்டத்தை வைத்திருப்பார்'' என்று சொல்லி என்னை ஊக்கப்படுத்தினார்கள்.

அன்பானவர்களே, உங்களது விசேஷித்த தன்மையை அலட்சியம் பண்ணாதிருங்கள். தேவன் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்குமுரிய ஆசீர்வாதங்களை சிறப்பாக ஏற்படுத்தி வைத்திருக்கிறார். அவை மற்ற யாருடையதும்போல் இல்லாமல், உங்களுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டதாகும்.

### பரிபூரணத்தில் வாழ்தல்

நீங்கள் பிழைத்திருப்பது மட்டுமல்ல; தம்முடைய பரிபூரணத்தோடு செழிப்பதே தேவனுடைய விருப்பமாகும். ''பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்'' (3 யோவான் 2). உங்கள் ஆத்துமா அவருக்குள் திருப்தியாக இருந்தால், எல்லாமே அதனதன் இடத்தில் அமையும். ''ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்'' (யோவான் 6:35) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். என்ன நிச்சயம்! அவருக்குள் நீங்கள் குறைவுபடமாட்டீர்கள்.

ஆகவே, நாளைய தினத்தைக் குறித்து கவலைப்படுவதற்கு பதிலாக, வேண்டியதை அருளிச்செய்யும் மேய்ப்பரை நோக்கிப் பாருங்கள். ஹட்ஸன் டெய்லரும், அவருடைய குடும்பமும் ஒன்றிலும் குறைவுபடாமல் இருந்ததுபோல, நீங்கள் முழுமனதுடன் ஆண்டவரை தேடுவதினால், உங்கள் குடும்பமும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், சுகத்தையும், ஆசீர்வாதத்தையும் அனுபவிக்கும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.



# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

## இத்தனை ஆண்டுகளில் 80 லட்சத்துக்கும் அதிகமானோர் பெதஸ்தாவுக்கு வந்து தேவனுடைய பலத்த அற்புதங்களை கண்டுள்ளனர்

ஊழியத்தில் என் உடன்பங்காளரே,

நாம் இணைந்து சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் நடக்கும்போது, நம் ஆண்டவர் உரைத்த ஜீவன் தரும், ''சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' (யோவான் 8:32) என்ற வார்த்தைகள் என் நினைவுக்கு வருகின்றன. கிறிஸ்து நமக்கு தந்துள்ள விடுதலையை உறுதிப்படுத்துகிற, மற்றவர்களை இதற்கு நேராக வழிநடத்த அழைக்கிற இந்த சத்தியத்தை மனதில் கொண்டே இதை எழுதுகிறேன். உங்களது இடைவிடாத ஜெபங்களும், உண்மையுள்ள ஆதரவும் கணக்கற்றோரின் வாழ்க்கையை இயேசுவின் சத்தியத்தைக் கொண்டு தொடுவதற்கு உதவுகின்றன. கட்டப்பட்டிருக்கும் கோடிக்கணக்கானோருக்கு விடுதலையின், நம்பிக்கையின் செய்தியை சுமந்துசெல்ல நீங்களும் நானும் தேவனின் கரத்தில் கருவிகளாயிருக்கிறோம்.

இந்த மாதத்திலும் ஆண்டவர் உங்களைக் கொண்டு பெரிதான கிரியைகளைச் செய்து, தமது விடுதலையை, சுகத்தை, சந்தோஷத்தை குறித்த சத்தியத்தை அநேகருக்குக் கொண்டு செல்ல பயன்படுத்துவார் என்று விசுவாசிக்கிறேன். உங்கள் பங்களிப்பை நாங்கள் வெகுவாக மதிக்கிறோம். அவருடைய ராஜ்யத்தின்மேல் நீங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பினால் கிடைக்கும் விடுதலை என்னும் பலனை காண ஆவலோடு எதிர்நோக்குகிறோம்.

கடந்த மாதத்தில், ஆண்டவர் ஊழியத்தின் மூலம் செய்த மகத்தான காரியங்களைக் குறித்து உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஜெபத்தின் மூலமும், வெளியிட கூட்டங்கள் மூலமும் தேவனுடைய பலத்த கரத்தால் தொடப்பட்ட கணக்கற்றோரின் வாழ்க்கைக்காக அவருக்கே சகல மகிமையையும் செலுத்துகிறேன். ஜெப கோபுரங்களுக்கு நேரில் வருகை தந்த 1,38,768 பேர் மன்றாட்டின் பலனை அனுபவித்துள்ளார்கள். தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட 3,80,002 பேர் ஜெபத்தின் மூலம் ஆறுதல் பெற்றுள்ளனர். சமூக ஊடகத்தின் மூலம் 2,24,113 பேர் புதிதாக தொடப்பட்டுள்ளனர். மின் பத்திரிகை (E-magazines) மூலம் 1.5 லட்சம் வாசகர்கள் ஆறுதலை பெற்றுள்ளனர். கடிதம், மின்னஞ்சல் மூலம் ஜெப விண்ணப்பங்களை எழுதிய 53,596 பேருக்கு ஜெபித்து, தேவனின் அன்பையும் வாக்குத்தத்தங்களையும் பதிலாக எழுதியுள்ளோம். ஜெப கோபுரங்கள் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட 67 வெளியிட கூட்டங்கள் மூலம் ஆண்டவர் வல்லமையாக செயல்பட்டு 3,563 பேரை ஆசீர்வதித்துள்ளார். வாராந்திர உபவாச ஜெபக் கூட்டங்களில் ஏறக்குறைய 16,125 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. மெய்யாகவே, இது கர்த்தரின் கிரியையாயிருக்கிறது; அது நம் கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

2025 செப்டம்பர் 4ம் தேதி, இயேசு அழைக்கிறார், காருண்யா, சீஷா குடும்பத்தினர் ஒன்றாக சேர்ந்து என்னுடைய 63வது பிறந்தநாளின்போது, ஊழியத்தை நிறைவேற்றுவதற்காகவும், அவருடைய உண்மைக்காகவும், என்னை வல்லமையாக பயன்படுத்துவதற்காகவும் தேவனை ஸ்தோத்திரித்தனர். இந்நிகழ்வின்போது 63வது புதிய கற்றல் மையம் கோட்டயத்தில் தொடங்கப்பட்டது. ஆலயங்களை கட்டுவதற்கும் புதுப்பிப்பதற்கும் போதகர்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. பல்வேறு திருச்சபைகளை சேர்ந்த 20 போதகர்களுக்கு 63 லட்ச ரூபாய் நன்கொடை வழங்கப்பட்டது. கண் சிகிச்சை முகாம், இரத்த தான முகாம், உணவு திருவிழா ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன; முதியோர் இல்லங்களுக்கும், ஆதரவற்றோர் இல்லங்களுக்கும் நன்கொடை

அளிக்கப்பட்டது. இந்த அன்பின் செயல்பாட்டில் உணவு, ஆடை, சமையல் பொருள்கள், பராமரிப்பு ஆகியவை இந்தியா முழுவதும் 41 சிறுவர் இல்லங்கள், 39 முதியோர் இல்லங்கள், 16 மறுவாழ்வு மையங்கள், 18 சிறப்பு குழந்தைகள் இல்லங்கள், 5 பார்வையற்றோர் பள்ளிகள் இவற்றைச் சேர்ந்த 2,000க்கும் மேற்பட்டோருக்கு வழங்கப்பட்டு, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். சென்னையில், Dr. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் ஆராதனை, கேக் வெட்டுதல் போன்ற நிகழ்வுகளும், திருச்சபை தலைவர்களின் ஆசீர்வாத செய்திகளும் இடம் பெற்றன. தேவனுடைய மறுரூபமாக்கும் வல்லமையைக் குறித்து என்னுடைய சாட்சியை பகிர்ந்துகொண்டு, தாழ்மையோடும், தேவனுடைய திட்டம் நிறைவேறுதலுக்கு உண்மையாகவும் இருக்கும்படி அனைவரையும் ஊக்கப்படுத்தினேன். நிகழ்ச்சி, ஆசீர்வாத மற்றும் ஸ்தோத்திர ஜெபத்துடன் நிறைவுபெற்றது.

இயேசு அழைக்கிறார் யூடியூப் சேனலில் 'ஜெபமே ஜெயம்' நேரடி ஒளிபரப்பை 10,215 பேர் பார்த்து ஆசீர்வாதம் அடைந்துள்ளனர். இந்நிகழ்ச்சி ஹிந்தி மொழியில் புதன்கிழமைதோறும் Jesus Calls ஆங்கில சேனலிலும், தெலுங்கு மொழியில் வியாழக்கிழமைதோறும் Jesus Calls தெலுங்கு சேனலிலும் இரவு 7:30 மணி முதல் 8:30 மணி வரையிலும் ஒளிபரப்பாகிறது. உங்கள் ஜெப விண்ணப்பங்களை +91 8546 999 000 என்ற எண்ணில் தொடர்புகொண்டு பகிர்ந்து கொள்ளுங்கள்.

**உங்கள் இடைவிடாத ஜெபமும், உண்மையுள்ள ஆதரவும் கணக்கற்றோரின் வாழ்க்கையை இயேசுவின் சத்தியத்தைக் கொண்டு தொடுவதற்கு உதவுகின்றன**

2025, செப்டம்பர் மாதம் வல்லமையான பல கூட்டங்கள் நடந்தன. சென்னை அமைந்தகரையில் அமைந்துள்ள ஆசீர்வாத ஆராதனை மையத்தில் 50 மணி நேர War Room ஜெபம் மற்றும் ஆராதனை நடந்தது. அதில் ஏறக்குறைய 500 பேர் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற்றனர். செப்டம்பர் 7ம் தேதி, சென்னை Dr. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் நடைபெற்ற காலை ஞாயிறு ஆசீர்வாத கூட்டத்தில் நான் கலந்துகொண்டு கூடி வந்திருந்த ஆயிரம்பேருக்கு ஊழியம் செய்தேன். செப்டம்பர் 14ம் தேதி சென்னை அண்ணா நகரில் அமைந்துள்ள ஜெப கோபுரத்தில் நானும் என் மனைவியும் ஊழியம் செய்தோம். அநேகர் தேவ பிரசன்னத்தை அனுபவித்து, விசுவாசத்தில் பெலப்பட்டோராய் கடந்து சென்றனர்.

## ஜெபியுங்கள்

நவம்பர் மாதத்தில் ஜெப கோபுரங்கள் வழியாக 2,50,000 பேரையும், தொலைபேசி ஜெப கோபுரங்கள் வாயிலாக 10,00,000 பேரையும், தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக 2 கோடி பேரையும், கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்கள் வாயிலாக 1 லட்சம் தனி நபர்களையும், பத்திரிகை வாயிலாக 2 லட்சம் குடும்பங்களையும் சந்திக்க இலக்கு வைத்துள்ளோம். இந்த முயற்சிகள் நல்ல பலன் கொடுக்கவேண்டுமென்றும், இன்னும் அநேக ஆத்துமாக்களை தொட வேண்டுமென்றும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

## பெதஸ்தா ஊழியத்தின் மூலம் மரணப் படுக்கையிலிருந்து எழுப்பப்பட்டார்

**"இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்.என் நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றைக்கும் இருக்கும்படி, நான் அதைத் தெரிந்துகொண்டு பரிசுத்தப்படுத்தினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் இங்கே இருக்கும்"**

**(2 நாளாகமம் 7:15,16)**

சென்னையை சேர்ந்த சகோதரி அன்னபூரணியின் தாயார் மிகவும் சுகவீனப்பட்டு வென்டிலேட்டர் உதவியுடன் இருந்தார்கள். பெதஸ்தா ஜெப மையத்தில் ஏறெடுக்கப்பட்ட பிரார்த்தனைகளால் மருத்துவர்களின் கணிப்புக்கு மாறாக அவர்கள் அதிசயமாக பூரண சுகம் பெற்றார்கள்.

ஆம், பெதஸ்தா ஜெப மையம், தீர்க்கதரிசன நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட அடைக்கலப் பட்டணமாக இருக்கிறது. கணக்கற்ற மக்கள் அங்கு தங்கள் இருதயத்தை ஊற்றி, விசுவாசத்துடன் ஜெபிக்கின்றனர்; நம்ப முடியாத அற்புதங்களைப் பெற்றுக்கொண்டு தேவனை ஸ்தோத்திரிக்கின்றனர். ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அது நம்பிக்கைக்கான பரிசுத்த ஸ்தலமாக, விடாய்த்த ஆத்துமாக்களை தேற்றுவதாக, உடைந்த உள்ளங்களை சுகப்படுத்துவதாக திகழ்கிறது. அங்கு தேவ பிரசன்னத்தை தேடி வரும் மக்கள் அவரது சமுகத்தின் சமாதானத்தை பெற்றுக்கொள்கின்றனர். இத்தனை ஆண்டுகளில் 80 லட்சத்துக்கும் அதிகமானோர் பெதஸ்தாவுக்கு வந்து தேவனுடைய பலத்த அற்புதங்களை கண்டுள்ளனர்; ஜெபங்களுக்கு பதில் கிடைத்ததற்காக, அற்புத சுகம் பெற்றதற்காக, வாழ்க்கை மறுரூபமானதற்காக சாட்சி கூறியுள்ளனர்.

கடந்த 32 ஆண்டுகளாக பெதஸ்தா ஜெப மைய ஊழியத்தை தாங்கி வருவதற்கு தேவன் உண்மையுள்ளவராக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். நாம் இணைந்து தேவனுடைய இடையறாத கிருபைக்காக அவரை ஸ்தோத்திரிப்போம்; உங்கள் வாழ்விலும் உங்களுக்கு அன்பானோர் வாழ்விலும் அற்புதங்களை காணும்படி பெதஸ்தாவுக்கு வருமாறு தங்களை அன்புடன் அழைக்கிறேன். இந்த ஜெப மையத்தை

குறித்து இந்த இதழின் 6ம் பக்கத்தில் விவரங்களை அறிந்துகொள்ளலாம்.

### IIT - JEEல் உயர் இடம் பெற்ற இளம் பங்காளர்

**"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப் பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்" (ஏசாயா 54:13)**

மும்பையை சேர்ந்த ரிச்சி, 2.5 லட்சம் பேர் எழுதிய IIT - JEE நுழைவுத் தேர்வில் 29வது இடத்தைப் பிடித்து IIT Bombayல் கம்ப்யூட்டர் சயன்ஸ் பிரிவில் சேர்ந்திருக் கிறான். இளம் பங்காளர் திட்டத்தில் சேருவதால் உங்கள் பிள்ளையும் இதுபோன்ற சாதனைகளை செய்யலாம்.

இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர் திட்டம், குழந்தைகளையும் இளைஞர்களையும் ஆண்டவரின் வழிகளில் நடத்துவதற்கான தெய்வீக திட்டமாகும். தினசரி ஜெபங்கள், ஆவிக்குரிய வழிகாட்டுதல், அர்ப்பணிப்புடன் கூடிய மன்றாட்டு ஆகியவற்றால் இளம் பங்காளர்கள் தேவ பாதுகாவலை, ஞானத்தை, தயவை பெற்று வளரு கிறார்கள். இந்தத் திட்டம் அடுத்த தலைமுறையினரை விசுவாச தலைவர்களாக, தங்கள் பள்ளிகள், கல்லூரிகள், அலுவல கங்கள் மற்றும் சமுதாயத்தில் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக பிரகாசிக்கும்படி பயிற்றுவிக்கிறது. இளம் பங்காளராக இணைவதன் மூலம் பிள்ளைகள் ஜெபத்தினால் மறைக்கப்பட்டு, தேவனுடனான உறவில் பெலப்பட்டு, திடநம்பிக் கையுடன், நோக்கத்துடன் எதிர் காலத்திற்கு அடியெடுத்து வைப்பார் கள். இந்தத் திட்டத்தைப் பற்றி இந்த இதழின் 26ம் பக்கத் தில் மேலும் விவரங்களை அறிந்துகொண்டு உங்கள் பிள்ளைகளை சேர்க்கலாம்.

> **இத்தனை ஆண்டுகளில் 80 லட்சத்துக்கும் அதிகமானோர் பெதஸ்தாவுக்கு வந்து தேவனுடைய பலத்த அற்புதங்களை கண்டுள்ளனர்; ஜெபங்களுக்கு பதில் கிடைத்ததற்காக, அற்புத சுகம் பெற்றதற்காக, வாழ்க்கை மறுரூபமானதற்காக சாட்சி கூறியுள்ளனர்**

### 572 சபைகளுக்கு உதவுவதன் மூலம் தேவ ராஜ்யத்தை விரிவுபடுத்துதல்

**"...ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 1:8)**

ஆலயம் கட்டுவது ஆரம்ப நாள் முதல் இயேசு அழைக் கிறார் ஊழியத்தின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. எல்லா நன்கொடைகளிலும் பத்தில் ஒரு பங்கை கிராமப் புறங்களிலும், நலிவுற்ற பகுதிகளிலும் ஆலயங்களை கட்டுவதற்கும், புதுப்பிப்பதற்கும், போதகர்களுக்கும், சபையினருக்கும் கொடுத்து உதவி வருகிறோம். கடந்த ஓராண்டில் மட்டும் 572 ஆலயங்கள் ஆசீர்வாதம் பெற்றுள்ளன. குறைந்த நிதியாதாரங்களுடன் இருக்கும் தேவனுடைய உண்மையான ஊழியர்கள், பொருளா தார உதவியும் ஊக்கமும் பெறுகின்றனர்; சமுதாயத்தினர் ஒன்று கூடி ஜெபிப்பதற்கும், தேவ செய்தியை கேட்பதற் கும், விசுவாசத்தில் பெலப்படவும் தக்கதாக இடங்களை ஸ்தாபிக்கிறார்கள். உங்கள் ஆதரவு தேவ ராஜ்யத்தின் பணியில் முன்னேறுவதற்கு எங்களுக்கு உதவுவதுடன், அநேக போதகர்களுக்கு தேவன் கொடுத்த கட்டளையை நிறைவேற்றவும் உதவுகிறது.

### உறக்கம் இல்லாத இரவுகளை மாற்றும் தொலைபேசி ஜெப கோபுரம்

**"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" (எரேமியா 33:3)**

சகோதரர் மைக்கேலின் மனைவி இரவில் உறங்க முடியாமல் அவதிப்பட்டார்கள். தொலைபேசியில் ஜெப வீரர்கள் ஜெபித்ததன் மூலம் சுகம் பெற்றார்கள். இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் தொலைபேசி ஜெப கோபுரம், தேவையிலுள்ள மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக, மக்கள் எங்கே இருந்தாலும் 24 மணி நேரமும் ஜெப உதவியை அளிப்பதாக, எந்தச் சூழ்நிலையில் இருந்தா லும் ஆண்டவரை ஜெபத்தின் வாயிலாக அணுக முடியும் என்று நினைவுறுத்துவதாக உள்ளது. அநேக மாதங்களில் 4 லட்சத்துக்கும் மேற்பட்டவர் கள் பாரங்களோடு, வியாதி யோடு, போராட்டங்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்கின்றனர். அர்ப்பணிப் புள்ள ஜெப வீரர்கள் அவர்களுக் காக ஜெபித்து, தேவ வாக்குத்தத் தங்களை, தைரியமளிக்கும் வார்த்தைகளை பகிர்ந்து கொண்டு ஆறுதல் அளிக்கின்ற னர். ஜெபத்தின் மூலம் சுகம், விடுதலை, சமாதானம், திருப்புமுனைகளை கண்டவர்களின் எண்ணற்ற சாட்சிகள் வந்து சேருகின்றன. வாழ்க்கையை மாற்றும் இந்த ஊழியத்தைக் குறித்த விவரங்களை இந்த இதழின் 14ம் பக்கத்தில் காணலாம். ஜெப உதவி தேவைப்படும் உங்கள் நண்பர்கள், அன்பானோருடன் 8546 999 000 என்ற எண்ணை பகிர்ந்துகொள்ளுங்கள்.

### காருண்யா மருத்துவமனைகள்

**"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர் களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 25:40)**

நலிவுற்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கு மருத்துவ பராமரிப்பு கொடுத்து வரும் காருண்யா மருத்துவமனைக் காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். மருத்துவ வசதி கிடைக்காமல் தவிக்கிற மக்களுக்கு இந்த மருத்துவமனை நம்பிக்கையாக விளங்கி வருகிறது; தேவைப்படுவோ ருக்கு இலவச மருத்துவ சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

மூட்டுமாற்று மற்றும் மூட்டு, தைராய்டு , நுண்துளை, குடலிறக்கம், குடல்வால், கருப்பை, முகச்சீரமைப்பு, பித்தப்பை உள்ளிட்ட பெரிய அறுவை சிகிச்சைகள் குறைந்த கட்டணத்தில் செய்யப்படுகின்றன. சமுதாய அர்ப்பணிப்பு மற்று தடுப்பு மருத்துவ நோக்கில், சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. அடுத்த ஆண்டு செப்டம்பருக்குள் 40 இலவச மருத்துவ முகாம்களை நடத்துவதற்கு காருண்யா மருத்துவமனைகள் திட்டமிட்டுள்ளன. இந்த முகாம்களில் உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் காருண்யா மருத்துவமனைகளுக்கு அழைத்துவரப்பட்டு, இலவசமாக சிகிச்சை பெறுவர். தன்னுடைய சேவையை விரிவுபடுத்தும் நோக்கில் காருண்யா மருத்துவமனை, 'நகரும் மருத்துவமனை' (Hospital on Wheels) என்ற முன்னெடுப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. தேவைகள் அதிகமுள்ள கிராமப்புறங்களுக்கு மருத்துவ சேவையை நேரடியாக எடுத்துச்செல்கிறது. வியாதியுற்றோரை சுகப்படுத்தும், ஏழைகளை பராமரிக்கும் இந்தப் பணிக்காக தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள். தேவன் தாமே இந்த சேவை செயல்பாடுகள் மூலமாக மகிமைப்படுவாராக.

### ஜெப தேவைகள்

நடக்க இருக்கும் ஆசீர்வாத கூட்டங்களில் நீங்களும் எங்களோடு இணைந்துகொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

> டிசம்பர் 25 - சென்னை, Dr. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் தினகரன் குடும்பத்தினரோடு கிறிஸ்துமஸ் ஆசீர்வாத கூட்டம்
>
> ஜனவரியில் சென்னையில் புத்தாண்டு ஆசீர்வாத கூட்டம்

இந்தக் கூட்டங்களுக்காக ஜெபிப்பதோடு, இதில் கலந்துகொள்ளவும் திட்டமிடுங்கள். வந்து தேவனுடைய பூரண ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

### ஒரு விசேஷித்த நாள்

அக்டோபர் 10ம் தேதி, சகோ. டி.ஜி.எஸ். தினகரன் அபிஷேகிக்கப்பட்ட நாள். இயேசு அழைக்கிறார் ஊழியம் தொடங்கப்பட்ட நாள்.

அன்பு பங்காளரே, ஆண்டவருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் வீணாய்ப்போகாமல், எண்ணற்றோரின் வாழ்க்கை பயன்பெறும்வண்ணம் மிகுந்த கனிகளைத் தருகிறது. கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக (1 கொரிந்தியர் 15:58). நாம் இணைந்து அவருடைய ராஜ்யம் பூரணமாக வெளிப்படும்வரைக்கும் விசுவாசத்தில் முன்னேறுவோமாக. ஆண்டவரின் நாமத்தில் உங்களை வாழ்த்துவதோடு, உங்களுக்காக ஜெபிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் அன்பு சகோதரன்,

Dr. பால் தினகரன்.



# தொலைபேசி ஜெப கோபுர ஊழியம்

அற்புதங்களுக்கான **நம்பிக்கை**

**நாங்கள் உங்களுக்காக 24 X 7 மணி நேரமும் ஜெபிக்கிறோம்**




**24X7 ஜெப உதவி எண்**

**8546 999 000**

"உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 18:19)

அநேக மாதங்களில் 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இயேசு அழைக்கிறார் தொலைபேசி ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டு, உடனடி ஜெப உதவியை பெறுகிறார்கள்; தேவனுடைய அற்புதங்களைச் செய்யும் வல்லமையை அனுபவிக்கிறார்கள். அபிஷேகமும் பயிற்சியும் பெற்ற அர்ப்பணிப்புள்ள ஜெப வீரர்கள், மனதுருக்கத்தினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்து, 24 X 7 மணி நேரமும் திறப்பில் நின்று விசுவாசத்தோடு ஜெபிக்கிறார்கள்; அனுதினமும் அற்புதங்களைக் காண்கிறார்கள். அப்போஸ்தலர் 12ம் அதிகாரத்தில் வாசிக்கிறபடி, சபையினரின் ஜெபம், சிறையிலிருந்து பேதுருவை கொண்டு வந்ததுபோல, இன்றைக்கு உங்கள் ஜெபம் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை நடப்பிக்கிறது. Dr. பால் தினகரனும் அவரது குழுவினரும் தனிப்பட்டவிதத்தில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ஜெபிக்கிறார்கள்; கணக்கற்றோரின் வாழ்க்கை மறுரூபமாக்கப்பட்டுள்ளது. தேவனுடைய உண்மையை விளங்கப்பண்ணும் சில சாட்சிகள்:

## ஜெபத்தின் மூலம் மறுரூபமாக்கப்பட்ட வாழ்க்கை

கடந்த 2 வருடங்களாக நான் வேலையில்லாமல் இருந்தேன். கடந்த மாதம் 26ம் தேதி, இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டேன். அந்த வாரத்திலேயே எனக்கு வேலை கிடைத்தது. இந்த அற்புதத்திற்காக தேவனை துதித்து ஸ்தோத்திரிக்கிறேன். - பானு, சென்னை.

விதவையாகிய நான் பல சவால்களை சந்தித்தேன். குறிப்பாக என் நிலத்தை விற்பதற்கு மற்றவர்கள் இடையூறு செய்தனர். ஆனால், ஜெப கோபுரத்தில் ஜெபித்தபிறகு என்னால் நிலத்தை விற்க முடிந்தது. புதிய வீடு ஒன்றையும் வாங்கினேன். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு விதவை ஓய்வூதியமும் கிடைத்தது. நான் நினைத்துப்பார்க்காதவற்றை தேவன் அருளிச் செய்தார். - K. சுசீலா, ஆந்திர பிரதேசம்.

ஒவ்வொரு நாளும் இந்த ஊழியத்தின் மூலம் தேவன் செய்கிறவற்றில் சிலவற்றையே கொடுத்துள்ளோம். ஒவ்வொரு அழைப்பும் கேட்கப்படுகிறது. ஒவ்வொரு ஜெபமும் விசேஷித்தது; அற்புதங்கள் தினமும் நடக்கின்றன. வரும் மாதங்களில் 10 லட்சம் பேருக்கு ஜெபிக்கும்படி தன்னார்வ தொலைபேசி ஜெப கோபுர வீரர்களை பயிற்றுவிக்கிறோம்; தொலைபேசி ஜெப கோபுர ஊழியத்தை மேம்படுத்த முயற்சிக்கிறோம்.

## ஊழியத்தில் அங்கம் வகித்திடுங்கள்

10 லட்சம் ஆத்துமாக்களை தொட்டு ஆசீர்வதிக்க எங்களுக்கு ஆதரவு தாருங்கள். தொலைபேசி ஜெப கோபுர ஊழியத்துக்கு தொழில்நுட்பம், தொலைபேசி கட்டமைப்பு, மனித வளம் என்று அநேக தேவைகள் இருக்கிறது. ரூ.1,000 அளிப்பதன் மூலம் ஒரு ஆத்துமாவுக்கு ஜெபம் கிடைக்க உதவுங்கள். உதாரத்துவமான நன்கொடை நம்பிக்கையற்றிருக்கிற பல லட்சம் பேருக்கு ஜெபிக்க உதவும்.

நன்கொடை அளிக்க: www.jesuscalls.org/donate/TPT

DONATE TO TPT

## தொலைபேசி ஜெப கோபுரத்தில் ஊழிய வாய்ப்பு

### முதுநிலை மேலாளர் - தொலைபேசி ஜெப கோபுரம்

இடம்: சென்னை * வேண்டிய திறன்கள்: முது நிலை நிர்வாக அனுபவம் (10 ஆண்டுகளுக்கு மேல்) * வாடிக்கையாளர் சேவை திறன் பகுப்பாய்வு (Analytical) திறன்
CRM அடிப்படையிலான செயல்பாடு
விண்ணப்பிக்க: careers@jesuscalls.org

தேவன் உங்கள் குரலை பயன்படுத்தி சங்கிலிகளை அறுக்கட்டும்; உள்ளங்களை ஆற்றட்டும்; வாசல்களை திறக்கட்டும். வாருங்கள், பல லட்சம் பேரின் கண்ணீரை துடைப்போம்.

## எங்களோடு தன்னார்வலராக இணைந்திடுங்கள்

தொலைபேசி ஜெப கோபுரத்தில் மற்றவர்களுக்காக தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னட மொழிகளில் ஜெபித்திட இணைந்திடுங்கள். உங்கள் வீட்டில் இருந்தபடியே கணினி அல்லது லேப்டாப்பை தொலைபேசி ஜெப கோபுர கணினியுடன் இணைத்தும் ஜெபிக்கலாம்.

**தளர்வான** (Flexible) **பணிவேளைகள்: 3, 6, அல்லது 8 மணி நேரம்.**

இரவு வேளை மற்றும் தேர்வு காலத்தில் அழைப்புகள் அதிகரிப்பதால் இன்னும் அநேக தன்னார்வ ஜெப வீரர்கள் தொலைபேசி ஜெப கோபுரத்துக்கு தேவை.

மின்னஞ்சல்: tpt@jesuscalls.org +91 6380 752 266
பங்காளர் சேவை: 044 - 23456677
(காலை 8 முதல் இரவு 8 மணி வரை)

"இந்தக் கல்லின்மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத்தேயு 16:18)

# தரிசனம் இந்தியா முழுவதும் 1000 ஆலயங்களை கட்டுதல்



வெள்ளத்தில் அழிந்துபோன ஆலயம்



இயேசு அழைக்கிறார் ஸ்தாபனத்தால் மறுபடியும் கட்டப்பட்ட ஆலயம், மன்னார்குடி

இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் ஆரம்ப காலமுதல் ஆலயங்களை கட்ட உதவுவது ஊழியத்தின் ஒரு பகுதியாகவே விளங்கி வருகிறது. ஒவ்வொரு மாதமும் இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு வரும் நன்கொடையில் 10%, போதகர்களுக்கு குறிப்பாக கிராமங்களிலும், தொலைதூர இடங்களிலும் ஆலயங்களை கட்டுவதற்கு கொடுக்கப்பட்டு வருகிறது. இயேசு அழைக்கிறார் பங்காளர்கள் கொடுக்கும் காணிக்கைகளால்தான் இதுபோன்று கிராமப்புறங்களில் ஆலயங்களை கட்டுவதற்கு உதவுகிறோம். பங்காளர்களாகிய நீங்கள் உதாரத்துவமாக அளிக்கும் காணிக்கையினால் கடந்த ஆண்டில் மட்டும் 572 ஆலயங்களை கட்டியுள்ளோம்; சீரமைத்துள்ளோம்.

"**அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்**" (2 கொரிந்தியர் 9:7) என்று வேதம் கூறுகிறபடி, நீங்கள் உதாரத்துவமாக அளிக்கும் காணிக்கை, இதுவரை தொடப்படாத மக்கள் ஆண்டவரை அறிந்துகொள்ளும்படி ஆலயங்கள் கட்டப்பட உதவுகிறது. அதற்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம். தம்முடைய ராஜ்யத்தின் விரிவுக்காக நீங்கள் அளிக்கும் காணிக்கையின் மூலம் ஆதாயம் செய்யப்படும் ஜனங்களை ஆண்டவர் உங்கள் கணக்கில் எழுதுவார்; அவர் உங்கள்மேல் பிரியமாகி உங்களை ஆசீர்வதிப்பார்.

இந்தியாவில் இதுவரைக்கும் 100க்கும் மேற்பட்ட ஆலயங்கள் கட்டப்பட உதவியுள்ளோம். கிராமப்புறங்களில் இருக்கும் அர்ப்பணிப்பு கொண்ட தேவ ஊழியர்களுக்கு நாம் இணைந்து உதவி செய்து, இந்தியா முழுவதும் 1000 ஆலயங்கள் கட்டப்படவேண்டும் என்ற இலக்கை எட்டுவோம்.

### உங்கள் காணிக்கை மூலம் கட்டப்பட்ட ஆலயத்தைப் பற்றிய சாட்சி:

எங்கள் ஆலயம் வெள்ளத்தால் அழிக்கப்பட்டது. விசுவாசிகள், சபை கூடி வருதல் தடைபட்டதால் மிகுந்த துக்கத்தோடு இருந்தார்கள். எங்களது சிறு கூரை கட்டடத்தை பணக்கஷ்டத்தினிமித்தம் சீர்ப்படுத்த முடியவில்லை. இந்த இக்கட்டான நிலையில் இயேசு அழைக்கிறார் ஊழியத்தை தொடர்புகொண்டோம். Dr. பால் தினகரன் எங்கள் கிராமத்துக்கே வந்து, சேதத்தை பார்த்தார்; உதவி செய்வதாக உறுதி கூறினார். தாம் சொன்னபடியே ஓராண்டு காலத்திற்குள் அழகிய கான்கிரீட் கட்டடத்தை கட்டிக்கொடுத்தார். இன்று எங்கள் சபை மன்னார்குடியில் செழித்து, அனைவருக்கும் ஆசீர்வாதமாகவும் ஆறுதலாகவும் இருக்கிறது. - போதகர் ஜாண் மதியழகன், மன்னார்குடி.

போதகர் ஜாண் மதியழகனைபோல ஏராளமான போதகர்கள், அவர்கள் குடும்பத்தினர், சபையினரை தேவனுடைய வேலை மேம்படுவதற்காக இதுபோன்ற சமயங்களில் தாங்குகிறோம்.

நன்கொடை வழங்க: www.jesuscalls.org/donate/Church

## வாருங்கள், நாம் இணைந்து தேவனுடைய ராஜ்யத்தை கட்டுவோம்!

இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு நன்கொடை அனுப்பக்கூடிய பல்வேறு வழிகளை இந்த இதழின் 17ம் பக்கத்தில் காணலாம். போதகர்களுக்கும் ஆலயங்களுக்கும் உதவும்படி உங்கள் காணிக்கையை 'ஆலய கட்டுமான நிதி' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

DONATE TO CHURCH BUILDING



# மன்னிப்பு கேட்ட பிறகும் நான் வெறுமையாக உணர்கிறேன், ஏன்?

ஹென்றி பிலிப்

## Dr. பால் தினகரன் பதிலளிக்கிறார்...

மன்னிப்பு, கிறிஸ்தவ வாழ்க்கையின் மையமாகும். ஆனால், சிலர் தேவனுடைய இரக்கத்தை அனுபவித்த பிறகும், ஏன் வெறுமையாக, வலிமையற்றவர்களாக, ஆசீர்வாதம் பெறாததுபோல உணர்கிறார்கள்?

மன்னிப்பு என்பது இறுதி கட்டமல்ல; கிறிஸ்துவுக்குள் மறுரூபமாக்கப்பட்ட வாழ்க்கையின் ஆரம்பம் என்பதை புரிந்துகொள்வதில்தான் இதற்கான பதில் இருக்கிறது.

### மன்னிப்பு நம்மை புதிதாக்குகிறது

அப்போஸ்தலனாகிய பவுல், ''இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' (2 கொரிந்தியர் 5:17) என்று எழுதுகிறான். தேவன் நம்மை மன்னிக்கும்போது, அவர் நம் பாவங்களை அழிப்பதோடு, கிறிஸ்துவுக்குள் புதிய அடையாளத்தையும் தருகிறார்.

இந்த சத்தியம் என் வாழ்வில் உண்மையானது. நான் கல்லூரியில் படித்த ஆண்டுகளில் தோல்வியின்மேல் தோல்விகளை சந்தித்தேன். ஆரோக்கியத்தில் பெலவீனமாக இருந்தேன். பயத்தில் தத்தளித்தேன்; எனக்கான எதிர்காலம் என்று ஒன்று தோன்றவேயில்லை. என் பாவங்கள் பாரமாய் என்னை அழுத்தின. நான் முற்றிலும் தகுதியற்றவனாக உணர்ந்தேன். ஆனால், ஒருநாள் இயேசுவுக்கு என் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தபோது, அவர் என் பாவங்களை கழுவி, என்னை புதுச்சிருஷ்டியாக்கினார். அந்தத் தருணத்திலிருந்து நான் ஓர் உடன்படிக்கை செய்தேன்: என்னுடைய பழைய பாவங்களுக்கோ அல்லது தேவனிடமிருந்து என்னை புறம்பே இழுக்கும் நட்பு வட்டத்துக்கோ நான் திரும்ப மாட்டேன். மாறாக, இயேசுவையே என்னுடைய நெருங்கிய நண்பராக தெரிவு செய்தேன். கல்லூரிக்கு புதிய பார்வையோடு சென்றதை நினைக்கிறேன். என் அருகில் ஒரு நாற்காலியை காலியாக விட்டு, அதில் என் நண்பர் இயேசு இருப்பதாக நினைத்துக்கொள்வேன். நான் படிக்கும் போதும் சரி, நடக்கும்போதும் சரி, ஊழியத்திற்கு ஆயத்தமாகும்போதும் சரி, ''ஆண்டவரே, நீர் என் சிநேகிதர். உம்முடைய பிள்ளையாக வாழ எனக்கு உதவும். நான் என்ன செய்யவேண்டும் என்று எனக்குக் கற்றுத்தாரும்'' என்பேன். நாள்தோறும் இப்படி அவருடன் நடந்ததினிமித்தம், பரிசுத்த ஆவியானவர் எனக்கு வழிகாட்டியாகி, நான் எப்படி படிக்கவேண்டும், எப்படி வாழவேண்டும், எப்படி தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்று எனக்கு கற்றுக்கொடுத்தார். என்னை பார்த்து பரிதாபப்பட்டவர்கள், என் மறுரூபமாகுதலைக் கண்டு களிகூர்ந்தார்கள். மெய்யாகவே, பரிசுத்தத்திலும் தேவனுக்கு நெருக்கமாகவும் ஜீவிப்பதை நான் தெரிந்துகொண்டபோது தேவனுடைய ஆசீர்வாதம் என்னை தொடர ஆரம்பித்தது.

### மன்னிப்பு, நம்மை தேவனோடு ஒன்றாயிருக்கப் பண்ணுகிறது

அநேக கிறிஸ்தவர்கள் மன்னிப்பு கேட்பதோடு நின்று விடுகிறார்கள்; ஐக்கியத்திற்குள் தொடர தவறிவிடுகிறார்

கள். மன்னிப்பு, நம்மைச் சீர்ப்படுத்துகிறது; கிறிஸ்துவுடனான உறவு நம்மை தாங்குகிறது.

தாவீது ராஜா இந்த சத்தியத்தை புரிந்துகொண்டான். அவன் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பியதும், ‘‘உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்’’ (சங்கீதம் 51:11) என்று ஜெபித்தான். தேவ பிரசன்னம் இல்லாத மன்னிப்பு, தன்னை வெறுமையாக விட்டுவிடும் என்று தாவீது அறிந்திருந்தான். கர்த்தருடைய சமுகத்தில் நிலைத்திருக்கும்போது அவன் சமாதானத்தையும் வழிகாட்டுதலையும் செழிப்பையும் பெற்றுக்கொண்டான். அந்த விஷயமே இன்றும் நிலைத்திருக்கிறது. மன்னிப்பு வாசல் மட்டுமே. இயேசுவுடனான சிநேகிதமே ஆசீர்வாதத்தை அனுபவிக்கக்கூடிய அறையாகும்.

> மன்னிப்பு, தேவன் தரும் ஈவாகும். தேவன் ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணுகிறார். அனுதின வாழ்வில் தேவனுடனான நெருக்கமும் மற்றவர்களுடனான உறவும் நாம் தெரிந்துகொள்ளக்கூடியவையாகும்

இந்த சத்தியத்தைக் குறித்து வல்லமையான உதாரணங்களை வரலாறு நமக்குக் தருகிறது. அடிமை வியாபாரியாக இருந்த ஜாண் நியூட்டன், தேவனுடைய மன்னிப்பைப் பெற்று, சுவிசேஷத்தை பிரசங்கிப்பவராக மறுரூபமடைந்தார். அவரது பாவ வாழ்க்கை கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டது; ஆனால், இயேசுவுடனான அவரது உறவு வேறுவிதமாக அவரைப் பெலப்படுத்தியது. தம் அடிமை வியாபாரத்தை அவர் கைவிட்டார். இயேசுவுடனான நெருக்கம் ‘தம் கிருபை பெரிதல்லோ’ (Amazing Grace) என்ற பாமாலையாகி, நூற்றுக்கணக்காக ஆண்டுகள் பல லட்சம் பேரை தொட்டது. நியூட்டனின் கதை, பாவங்கள் மன்னிக்கப்படுவதால் மட்டும் ஆசீர்வாதங்கள் புரண்டு வந்துவிடாது; மன்னிக்கப்பட்ட இருதயம், கிறிஸ்துவோடு அனுதினமும் நடப்பதை, மற்றவர்களோடு இருக்கும் உறவில் கிறிஸ்துவின் சுபாவத்தை வெளிப்படுத்த தெரிந்துகொள்ளும்போதே ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்பதைக் காட்டுகிறது.

### தேவனோடு நடக்கிறவர்களை ஆசீர்வாதங்கள் தொடருகின்றன

வேதம், ‘‘என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்’’ (சங்கீதம் 23:6) என்று கூறுகிறது. ‘தொடரும்’ என்ற வார்த்தையை கவனியுங்கள். ஆசீர்வாதங்களை துரத்திப் பெற முடியாது. தேவ சமுகத்தில் வாழ்கிறவர்களுக்கு இயல்பாகவே அவை கிடைக்கின்றன. மன்னிப்பு, வெட்கத்தை அகற்றுகிறது. ஆனால், பரிசுத்தமும் கீழ்ப்படிதலும் கனத்தை அழைக்கின்றன. தேவனுக்காக நாம் வாழும்போது, ஆசீர்வாதங்கள் கேள்விக்குரியவை அல்ல. நிச்சயமாகவே அவை கிடைக்கும். தேவன் தாமே, தம் மன்னிப்பின் பரிபூரணத்தை அனுபவிக்க உங்களுக்கு உதவுவாராக.


## கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்



DIGITAL ONLINE SCAN & PAY

SCAN & PAY INSTANTLY VIA UPI

UPI jesuscalls@indus

**BANK TRANSFER:**

| Bank | Beneficiary | A/c No. | IFSC |
|---|---|---|---|
| IndusInd | JESUS CALLS | 555444333222111 | INDB0000167 |
| ICICI | JESUS CALLS | 000901056144 | ICIC0000009 |

Please share your donation detail to us through Whatsapp to 98409 99923

Website: www.jesuscalls.org/donate

Jesus Calls Mobile app (available in Android & iOS)

**OFFLINE METHODS**

- EMO/Cheque /DD in favour of "JESUS CALLS"
- Can be sent by registered post to: Prayer Tower, 16, Dr. DGS Dhinakaran Road, Chennai 600028.
- In person: At the prayer tower in your area

For donation related/partner plans/receipts related queries, please call or Whatsapp 98409 99923. For 24x7 Prayer support, please call 8546999000

வாலிபர் பகுதி

# விசேஷித்த காவலர்



**“உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்” (ஏசாயா 54:17)**

என் இளம் நண்பனே, இந்த அக்டோபர் மாதத்தில் தேவன் உங்களுக்கு விசேஷித்த காவலராக இருக்கப்போவதாக வாக்குப்பண்ணுகிறார். அவர் தூரத்தில் இருந்து நம்மை பார்த்துக்கொண்டிருப்பவர் மட்டுமல்ல; நம் வழிகளில் எல்லாம் துடிப்பாக நம்மை பாதுகாக்கவும் செய்கிறார். இரவும் பகலும் ஆழமான அன்போடு, கூர்மையான பாதுகாப்போடு ஒருவர் நம்மை கண்காணித்துக்கொண்டிருக்கிறார். அந்த ஒருவர், நம் தேவனாவார்.

வேதம், “உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்” (ஏசாயா 54:17) என்று சொல்கிறது. எவ்வளவு வல்லமையான வாக்குத்தத்தம்! தேவன், ஆயுதங்கள் உருவாக்கப்படாது என்று கூறவில்லை; அவை வாய்க்காதேபோம் என்றே கூறுகிறார். தாக்குதல்கள் நடக்கலாம்; உபத்திரவங்கள் எழும்பலாம்; ஆனால், அவை வாய்க்காது.ஏனெனில், ஆண்டவர் உங்களை பாதுகாக்கிறார். இந்த மாதத்தில், நீங்கள் தனியே இல்லை என்பதை அறிந்து ஆறுதலடையுங்கள். ராஜாதி ராஜா உங்களைக் கண்ணோக்கிக் கொண்டிருக்கிறார். அவர் உங்களுக்குக் கேடகமாக, மீட்பராக இருக்கிறார்.

samuel@jesuscalls.org samueldhinakaranofficial

தேவ பிள்ளைகளுக்கு விரோதமாக தாக்குதல்களை பிசாசு எப்போதும் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை அறியாதிருக்கக்கூடாது. அவன் நம்மை எடைபோட்டுக்கொண்டிருக்கிறான். நம்முடைய பெலவீனங்கள் எவை என்று பிசாசு அறிந்திருக்கிறான். நம்மை தேவனை விட்டு புறம்பே இழுப்பதே அவனுடைய இலக்காகும். நாம், “எனக்கு இது நடக்குமா?” “காரியங்கள் தவறாகப் போய் விட்டால் என்ன செய்வது?” “நான் பாதுகாப்பாக இருக்கிறேனா?” “மக்கள் என்னை விரும்புவார்களா?” என்று எப்போதும் கவலைப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டுமென்று அவன் விரும்புகிறான். சத்துரு, சுயத்தையே கவனித்து, பயத்தோடு இருக்கும் கண்ணிக்குள் நாம் சிக்கிக் கொள்ளவேண்டுமென்று நினைக்கிறான். அர்ப்பணிப்பதற்கு பதிலாக, பிழைத்திருப்பதற்கும், தேவனை பிரியப்படுத்துவதற்குப் பதிலாக மனுஷரை பிரியப்படுத்துவதிலும் நம் ஆற்றலை செலவழிக்கவேண்டும் என்று விரும்புகிறான்.

## சத்துருவின் மூன்று பொதுவான தாக்குதல்கள்

### அ) சோதனை

சோதனை, தனிப்பட்டது. எவ்விதமான சோதனை உங்கள் கவனத்தை சிதறச் செய்யும் என்று பிசாசு அறிந்திருக்கிறான். ஒருவரை கீழே தள்ளும் விஷயம் இன்னொருவரை பாதிக்காது. இவை எல்லாவற்றின் மத்தியிலும் ஆண்டவர் அவற்றை எதிர்ப்பதற்கும் மேற்கொள்வதற்கும் நமக்குப் பெலன் தருகிறார். நீங்கள் தனியே போராடவில்லை.



### ஆ) நோக்கத்தை விட்டு கவனத்தை திருப்புதல்

அநேக இளைஞர்கள் இன்றைக்கு பிரபலத்தின் அடிப்படையில் பாதைகளை தெரிவுசெய்கின்றனர். சமூக ஊடகம் ஒளிக்காக வாழ்வதைக் காட்டிலும் likes பெறுவதை கற்றுத்தருகிறது. "என் நண்பர்களை எப்படி என்னைபோல் மாற்றுவது?" "எது என்னை பிரபலமாக்கும்?" என்று கேட்க ஆரம்பிக்கிறோம். அது நுட்பமான தாக்குதல். தேவனுடைய நோக்கமில்லாமல் பொதுவான அனுமதியின்பேரில் நம்முடைய தெரிவுகள் இருக்குமானால் நாம் ஆபத்தான இடத்தில் நடக்கிறோம். மக்களின் அனுமதியானது மங்கிப்போகும். தேவ தயவே என்றென்றைக்கும் நிலைநிற்கும் என்பதை நினைவில் கொள்ளுவோம்.

> **தேவன், ஆயுதங்கள் உருவாக்கப்படாது என்று கூறவில்லை; அவை வாய்க்காதேபோம் என்றே கூறுகிறார்**

### இ) அன்பானோர்மேல் தாக்குதல்

நம்முடைய குடும்பத்தினர் மூலமும் நண்பர்கள் மூலமும் பயத்தைக் கொண்டு வருவது சத்துருவின் இன்னொரு தந்திரமாகும். உதாரணமாக, பல வேளைகளில் என் தந்தை பிரசங்கிப்பதற்காக வெளியே செல்லும்போது, என் அம்மா சுகவீனப்படுவார்கள். சத்துரு, ஊழியத்தைத் தடுப்பதற்காக பயத்தை பயன்படுத்த முயற்சிப்பான். ஆனால் என் தாயார் விசுவாசத்தில் உறுதியாக நின்று, "போய் ஊழியம் செய்யுங்கள். என்னை பற்றி கவலைப்படாதிருங்கள்? என்று சொல்லுவார்கள். அவர்களுடைய தைரியத்தினால் பலர் ஆசீர்வாதம் பெற்றனர்; அவர்களும் குணப்பட்டார்கள். நாம் செய்யும்படி தேவன் அழைத்திருக்கும் காரியத்தை, நமக்கு அன்பானோருக்கு நேரிடுவதைப் பார்த்து பயந்து செய்யாமல் விட்டோமானால் பிசாசு ஜெயித்துவிடுவான். ஆனால் தேவனை நம்பி, விசுவாசத்தோடு தொடர்ந்து நடப்போமானால், நாமும் நமக்கு அன்பானோரும் மேற்கொள்ளுவோம்.

### நம்மை காப்பவரின் இருதயம்

ஒரு கதை ஒன்றை நான் சொல்லட்டும். ஒரு மனிதருக்கு முகத்திலும் உடலெங்கும் ஆழமான தழும்புகள் இருந்தன. பக்கத்து வீட்டுப் பையன் தன் நண்பர்களை அழைத்து வந்து அவரை கிண்டல் செய்வான். அவரது வீட்டைக் கடந்து செல்லும்போது சிரிப்பார்கள். ஒருநாள் அவன் தாயார், அவர்கள் பேசுவதைக் கேட்டு, அவனை பக்கமாய் இழுத்தார்கள். "நீ குழந்தையாயிருந்தபோது, நம் வீட்டில் தீப்பற்றியெரிந்தது. உதவியற்ற நிலையில் தவித்தபோது, இந்த மனிதர் நெருப்புக்குள் பாய்ந்து உன்னை காப்பாற்றினார். உன் உயிரைக் காப்பதற்காக தாம் காயப்பட்டார்" என்று கூறினார்கள். அந்தப் பையன் அழுதான். தன்னை காப்பாற்றியவரையே அவன் கேலி செய்திருக்கிறான். அவன் அந்த மனிதரிடம் ஓடிச்சென்று அவரை இறுகப் பற்றிக்கொண்டான்.

இதைத்தானே நம்மில் பலர் இயேசுவுக்கு செய்கிறோம் நமக்காக சிலுவையில் தம் ஜீவனை அவர் கொடுத்தார். பாவமும் சாத்தானும் நம்மை விழுங்கிவிடாதபடி, காயப்பட்டு இரத்தம் சிந்தினார். ஆனாலும் சிலவேளைகளில் அவரை மறந்துபோகிறோம். நாம் தெரிந்துகொள்பவற்றின் மூலம், நண்பர்கள் மூலம் அவரை கிண்டல் பண்ணுகிறோம். ஆனாலும் அவர் ஒருபோதும் நம்மை தவிர்ப்பதில்லை.

### நன்றியுடனும் நம்பிக்கையுடனும் இருப்பதற்கான அழைப்பு

இந்த மாதம் நம் பாதுகாவலரிடம் திரும்புவோம். "இயேசுவே, நான் வருந்துகிறேன். என்னை பாதுகாப்பதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். எனக்காக இரத்தஞ்சிந்தியதற்காக நன்றி. நான் அறிந்திராதபோதும், என் வாழ்க்கையை கண்ணோக்குவதற்காக நன்றி. உம்முடைய வழியில் என்னை நடத்தும். கவனம் சிதறாமல் காத்துக்கொள்ளும். உம்முடைய நோக்கத்தில் தைரியமாக நடக்க உதவும்" என்று கூறுவோம்.

நம் பாதுகாவலர் அருகில் வர சந்தோஷத்துடன் நடப்போம். அவர் நம்மை பாதுகாப்பதோடு, சந்தோஷத்திற்குள், சமாதானத்திற்குள், வெற்றிக்குள் நம்மை வழிநடத்துவார். தாம் வாக்குப்பண்ணியவிதமாகவே தேவன் இந்த மாதத்தில் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**உங்களுக்கு சில கேள்விகள்:**

1. சமீபத்தில் உங்களுக்கு விரோதமாக சத்துரு உருவாக்க முயன்ற ஆயுதங்கள் எவை?
2. பயத்தினால், சோதனையினால், மற்றவர்களின் அனுமதிக்காக உங்கள் கவனம் சிதறியதா?
3. உங்கள் பாதுகாவலரான தேவனை இன்னும் அதிகமாக நம்புவதற்கு இந்த மாதத்தில் என்ன செய்யப் போகிறீர்கள்?

**ஜெபம்:** ஆண்டவர் இயேசுவே, என்னை காக்கிறவராகவும் எனக்கு பாதுகாவலராகவும் இருப்பதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். சத்துருவின் திட்டங்களை அறிந்துகொண்டு, விசுவாசத்தில் உறுதியாய் நிற்க எனக்கு உதவும். சோதனையிலிருந்தும் பயத்திலிருந்தும் என் இருதயத்தை பாதுகாத்துக்கொள்ளும். என் வாழ்க்கையைக் குறித்து நீர் வைத்திருக்கிற நோக்கத்திற்குள் என்னை வழிநடத்தும். நான் உம்மை நம்ப முடிவெடுத்துள்ளேன், ஆமென்.





# செம்மையானவனுடைய முடிவு சமாதானம்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

**"நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனை பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்!"** (சங்கீதம் 37:37)

இந்த உலக வாழ்க்கையில் கர்த்தரை தேடாமல், தங்கள் மனம்போனபோக்கில் வாழ்கிற மக்கள் ஏராளம்பேர்! அவ்வாறு எந்தவிதமான நோக்கமுமின்றி வாழ்கிற மக்கள், தங்கள் வாழ்வில் கர்த்தரை பயபக்தியுடன் நாடித்தேடாமல், தங்கள் சுயவிருப்பம், சுய சித்தத்தையே நிலைநாட்ட விரும்புகிறார்கள். மேலும் அவர்கள் மாம்ச சிந்தைக்கு அடிமைப்பட்டு, தேவாதி தேவனுடைய திருவுள சித்தத்தை கொஞ்சமும் நாடித் தேடாதவர்களாகவேயிருக்கிறார்கள். இத்தகையோர் வாழ்வுதான், தங்கள் மாம்சமும், மனமும் விரும்பினவைகளை செய்து, பாவத்திற்கும், கிறிஸ்துவுக்கு பிரியமில்லாத கிரியைகளுக்கும் அடிமைப்பட்டு, அதினிமித்தம் தெய்வீக சமாதானத்தை முற்றிலும் இழந்து காணப்படுகிற வாழ்வாக இருக்கும்.

## நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது!
(ஏசாயா 53:5)

சங்கீதம் 29:11-ல் "கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்!" என்றும், மீகா 5:5-ல், "இவரே சமாதான காரணர்!" என்றும் வேதத்தில் நாம் வாசிக்கிறோம். விசேஷமாக, கொலோசெயர் 1:20,21-ல் நாம் வாசிப்பதென்ன?

"**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலே தம்மையே ஜீவ பலியாக அர்ப்பணித்து, சிந்திய தமது பரிசுத்த இரத்தத்தினாலே, சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்த உங்களையும் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாயும் தமக்கு முன் நிறுத்தும்படியாக, அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே ஒப்புரவாக்கினார்.**"

தேவன் அருளும் சமாதானத்தின் மேன்மையை அறியாமல், இருளில் வாழ்ந்துகொண்டிருந்த சவுல் என்ற ஒரு மனிதன் இருந்தான். அவன், தேவனுக்கு விரோதமான பல காரியங்களை செய்து, "கோபாக்கினையின் பாத்திரமாக" காணப்பட்டான். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோ அவன்மீது மிகுந்த இரக்கம் வைத்து, அவனை ஒருநாளில் நேரில் சந்தித்து பேசியதினிமித்தம், அநேகர் தேவனுடைய சமாதானத்தைப் பெற்று அனுபவிக்க செய்யும் தெய்வீகம் நிறைந்த "கிருபா பாத்திரமாக" அவனை முற்றிலுமாக மாற்றினார் (அப்போஸ்தலர் 9-ம் அதிகாரம்).

அருமையானவர்களே, ஆண்டவர் இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களாக, இவ்விதமான "தெய்வீக சமாதானத்தை" நீங்கள் பெற்றுக்கொண்டுவிட்டீர்களா? இல்லையெனில், இன்றே தனித்தனியேயும், குடும்பம்

குடும்பமாகவும் அதை பெற்றுக்கொள்ளும்படி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களை தம்முடைய அருள் கரம் நீட்டி அன்போடு அழைக்கிறார். இத்தகைய தெய்வீக சமாதானத்தின் மேன்மையை உணர்ந்து, “கிருபா பாத்திரங்களாக” நீங்களும் மாறும்படி உங்களை அவருக்கு முன்பாகத் தாழ்த்தி அர்ப்பணியுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களுக்கும் அப்படிப்பட்ட தெய்வீக கிருபையை நிறைவாய் அருளி, தமது தெய்வீக சமாதானத்தினால் உங்களை நிரப்புவார்.

## தம்மை நம்புகிறவனை கர்த்தர் சமாதானத்தோடு காத்துக்கொள்வார்!

**“உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்”** (ஏசாயா 26:3)

இந்த நம்பிக்கை நமக்குள் எப்படி வருகிறது? கர்த்தரை உறுதியாகப் பற்றிக்கொண்ட மனதையுடையவர்களுக்கு அவர் தமது தெய்வீக நம்பிக்கையையும், பூரண சமாதானத்தையும் அருளுவார். வேதாகம பக்தர்களாகிய தாவீது, யோபு, ஆபிரகாம் போன்ற யாவரும் இத்தகைய தெய்வீக நம்பிக்கையுடன், தேவன் அருளிய தெய்வீக சமாதானத்தையும், பூரண ஆசீர்வாதத்தையும் தங்கள் வாழ்வில் நிறைவாய் பெற்றுக்கொண்டார்கள் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். இவர்கள் யாவரும் கடந்துசென்ற பாதைகளும் பற்பல வேதனைகளாலும், குறைவுகளாலும் சூழப்பட்ட கண்ணீரின் பாதைகளேயாகும்.

**தெய்வீக சமாதானத்தின் மேன்மையை உணர்ந்து, நீங்களும் கிருபா பாத்திரங்களாக மாறும்படி உங்களை அர்ப்பணியுங்கள்**

பக்தன் ஆபிரகாம் மிகவும் வயது சென்ற, குழந்தையில்லாத நிலையில், “என் தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளாக மாற்றுகிறவர்” (ரோமர் 4:17) என்று விசுவாசித்து, தேவனுடைய வாக்குத்தத்தங்கள்மீது தனது முழு நம்பிக்கையையும் கொண்டபடியினால், அவன் தன் முதிர்வயதிலே தேவன் கிருபையாய் அருளிய பாலகன் ஈசாக்கைப் பெற்றுக்கொண்டதோடு, அவரது தெய்வீக சமாதானத்தினாலும், சந்தோஷத்தினாலும் நிரம்பிய வாழ்வைப் பெற்றான்.

அதேபோன்று பக்தனாகிய தாவீது, ஒரு சமயம் எல்லாவற்றையும் இழந்து மிகவும் நெருக்கப்பட்ட சூழ்நிலையிலும், 1 சாமுவேல் 30:6-ல் வாசிப்பது போன்று “தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்டான்”. அதினிமித்தம் அவனுக்கு நடந்தது என்ன? முதலாவதாக, “கர்த்தர் அருளிய தெய்வீக சமாதானம்” அவன் இருதயத்தையும், வாழ்வையும் நிரப்பியது. அதோடுகூட அவன், “**ஒன்றும் குறைவுபடாமல் இழந்த எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக்கொண்டான்**” என்றும் வாசிக்கிறோம் (1 சாமுவேல் 30:19). ஆகவேதான், அவன் சங்கீதம் 23-ல், “கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்” என்று மகிழ்ச்சியுடன் பாடியிருக்கிறான்.

பிரியமானவர்களே, உங்கள் வாழ்விலும் இப்படிப்பட்ட பல்வேறு பாடுகள், பிரச்னைகள் வழியே நீங்களும் கடந்துசெல்ல வேண்டியிருப்பதினிமித்தம், மனவேதனையோடு சமாதானம், சந்தோஷம் எதுவுமின்றி, கண்ணீரின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களோ? அல்லது பல்வேறு இல்லாமைகள், வாழ்வின் குறைபாடுகள் நிமித்தம் சோர்வு, சஞ்சலம் நிறைந்தவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களோ?

**“நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.”** (பிலிப்பியர் 4:6,7) என்றும்,

**“உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்”** (சங்கீதம் 37:5)

என்றும் வேதம் நமக்கு தெளிவாகக் கூறுகிறதல்லவா?

ஒவ்வொரு நாளும் நீங்கள் தனித்தனியேயும், குடும்பமாகவும் உங்கள் சமாதானக் குறைவுக்கான காரியங்களை கர்த்தரிடம் “ஜெபம் செய்வதின் மூலமாக”, விசேஷமாக குடும்ப ஜெபம் மூலமாக தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, அவர் உங்கள்

விண்ணப்பத்திற்கு ஏற்ற சமயத்தில் ஆசீர்வாதமான பதில் தருவார்.

என் வாழ்வில், விசேஷமாக எனக்கு திருமணம் ஆகி, குடும்ப வாழ்வை ஆரம்பித்த காலங்களில், நான் பயபக்தியோடுகூட கர்த்தரை நோக்கிப் பார்த்து வேண்டுதல் செய்தபொழுதெல்லாம், அவர் என்னோடு பேசி, அற்புதமான விதத்தில் சமாதானம் சந்தோஷத்தி னால் என்னை நிரப்பி, ஆசீர்வாதமான வாழ்வை அருளிச் செய்தார்.

## சமாதானத்தின் தேவன் உங்களை பரிசுத்தமாக்குவார்

**“சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக...”**
(1 தெசலோனிக்கேயர் 5:23)

இன்றைய நாட்களில், குடும்பங்க ளிலே ஒற்றுமை, அன்பு, சமாதானம், சந்தோஷம் இவை எதுவுமே இல்லாத நிலையிலே, மக்கள் பிரிவினை களும், மனக்கசப்புகளும் நிறைந்து வாழ்கிறதையே நாம் காண்கி றோம். கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள் மத்தி யிலே எவ்வளவோ விதம்வித மான பிரச்னைகள் காணப்படு கின்றன. குறிப்பாக, தங்களை கஷ்டப்பட்டு தியாகம்பண்ணி வளர்த்த பெற்றோரின் அன்பை ஏளனப்படுத்தி, வயது சென்ற காலத்தில் அவர்களோடு சமாதானமின்றி வேதனைப்படுத்தும் பிள்ளைகள் இன்று ஏராளம் பேர் இருக்கிறார்கள். இதைப்போன்றே சகோதரர், சகோதரிகள் ஒருவருக் கொருவர் பற்பல ஏற்றத்தாழ்வுகள் நிமித்தம் சமாதா னத்தை இழந்து கண்ணீரில் வாழ்ந்துகொண்டிருக் கிறார்கள்.

**சமாதானத்தின் தேவன் உங்களை சகலவித நற்கிரியை களினாலும் சீர்பொருந்தினவர் களாக்குவார்**

வேத புத்தகத்திலே, ஏசா, யாக்கோபு என்ற சகோதரர்கள் எதிரிகளைப்போல் வாழ்ந்து, கொலை செய்யவும்கூட துணிந்து, சமாதானமின்றி வாழ்ந்தார் கள் என்று வாசிக்கிறோம். இன்றைய காலத்திலும்கூட அதுபோன்றே குடும்பங்களிலே விரோதம், வைராக்கி யம், பிரிவினை, கசப்பு இவைகள் உருவாகி, அதினி மித்தம் அநேகம் குடும்பங்கள் சமாதானக் குறைவு களுடன் பிரிந்து வாழ்வதை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையில், யாக்கோபு தேவனை உண்மையாய் தேடினதினிமித்தம், அவனுடைய வாழ்வில் தேவன் அருளிய தெய்வீக சமாதானம் அவனை அளவில்லாமல் நிரப்பியது. ரோமர் 16:20-ல் நாம் வாசிக்கிறபடியே, சமாதானத்தின் தேவன் யாக்கோபின் வாழ்வில், அவன் தேவாதி தேவனை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டி ருந்தபடியால், அவன் கால்களின்கீழ் சாத்தானை கர்த்தர் நசுக்கிப்போட்டார். ஏற்ற சமயத்தில் தேவன் அவர்களுக்குள் தமது தெய்வீக சமாதானத்தை அருளிச் செய்து, சகோதரர் இருவரும் ஒரே மனதுடன் கூடி, தங்கள் வயது சென்ற தகப்பனார் ஈசாக்கை அடக்கம் செய்து கனப்படுத்தவும் தக்கதாக தமது தெய்வீக சமாதானத்தினால் நிரப்பி, அவர்களை வழிநடத்தினார்.

எனவே அன்பானவர்களே, வேதம் கூறுகிற படியே, **“சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்”** என்பதை உணர்ந்து நடப்பதில் நாம் ஒவ்வொருவரும் ஜாக்கிரதை யாயிருப்போம் (1 கொரிந்தியர் 7:15). மட்டுமல்ல, பிலிப்பியர் 4:6,7-ல் வாசிப்பதுபோன்று, ஸ்தோத்திரத்தோடுகூடிய ஜெபத் தினாலும், வேண்டுதலினாலும் சகல காரியங்களையும் தேவ னுக்கு தெரியப்படுத்தி, அதின் மூலம் தேவன் அருளும் “எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தினால் நிரம்பி யவர்களாக” வாழும் தெய்வீகக் கிருபையை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளுங்கள்.

“நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணின சமாதானத்தின் தேவன்,

இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாக பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களை சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவ தாக” என்று எபிரெயர் 13:20,21 ஆகிய வேத வசனங் களில் வாசிக்கிறபடியே, ஆண்டவராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின “சமாதானத் தின் தேவன்” தாமே தமது சித்தத்தின்படி உங்களை யும் சகலவித நற்கிரியைகளினாலும் சீர்பொருந்தின வர்களாக்குவாராக!



# இன்றைய இறை தியானம்

## அக்டோபர் – 2025

1 **யோவான் 8:32 - சத்தியம் உங்களை விடுதலையாக்கும்**
**தியானத்திற்கு:** சங். 119:170; அப். 16:36; 2 கொரிந்தியர் 3:17

2 **எசேக்கியேல் 37:14 - தேவனுடைய ஆவி**
**தியானத்திற்கு:** ஏசாயா 59:21; தானி. 4:18; லூக்கா 1:35; அப். 2:17,18

3 **எசேக்கியேல் 36:11 - கர்த்தர் உங்களுக்கு நற்சீர் தருவார்**
**தியானத்திற்கு:** நீதிமொழிகள் 28:2; 2 கொரிந்தியர் 13:9,11

4 **ஏசாயா 43:19 - ஆண்டவர் வழியை உண்டாக்குவார்**
**தியானத்திற்கு:** நெகே. 9:19; சங்கீதம் 25:12; 31:3; 1 கொரி. 12:31

5 **நீதிமொழிகள் 22:29 - ஜாக்கிரதையாயிருங்கள்**
**தியானத்திற்கு:** நீதிமொழிகள் 12:24; 1 பேதுரு 4:7; 2 பேதுரு 1:10

6 **1 பேதுரு 2:3 - வாஞ்சையாயிருங்கள்**
**தியானத்திற்கு:** யோபு 6:8; சங். 42:1; 91:14; உன். 2:3; 2 கொரி. 5:2

7 **3 யோவான் 2 - வாழ்ந்து சுகமாயிருங்கள்**
**தியானத்திற்கு:** நெகே. 9:25; ஏசாயா 35:1-4; எசே. 28:26; அப். 14:17

8 **எபிரெயர் 7:25 - உயிரோடிருக்கிறார்**
**தியானத்திற்கு:** எபிரெயர் 1:12; 13:8; வெளிப்படுத்தல் 1:18

9 **சங்கீதம் 121:4 - கர்த்தர் உங்களைக் காக்கிறவர்**
**தியானத்திற்கு:** யாத். 23:20; நீதி. 3:26; ஏசாயா 52:12; சகரியா 2:8

10 **ஏசாயா 59:19 - தேவனுடைய ஆவியானவர்**
**தியானத்திற்கு:** ஏசாயா 61:1; யோவான் 16:13; அப். 10:38; ரோமர் 8:14

11 **லூக்கா 6:38 - கொடுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும்**
**தியானத்திற்கு:** நீதி. 11:25; மத். 10:41,42; மாற்கு 4:24; 2 கொரி. 9:6-8

12 **2 கொரிந்தியர் 5:14 - கிறிஸ்துவின் அன்பு**
**தியானத்திற்கு:** யோவான் 13:1; கலா. 2:20; எபே. 3:18,19; 2 தெச. 2:16,17

13 **நீதிமொழிகள் 2:6 - கர்த்தர் ஞானத்தைத் தருகிறவர்**
**தியானத்திற்கு:** யாத். 35:30-33; தானி. 2:21; லூக்கா 21:15; யாக். 1:5

14 **கொலோசெயர் 3:14 - பூரண அன்பு**
**தியானத்திற்கு:** சங்கீதம் 31:23; கொலோ. 2:2; 1 யோவான் 2:5; 4:12,18

15 **ரோமர் 8:32 - சகலத்தையும் அருளுகிற தேவன்**
**தியானத்திற்கு:** ஆதி. 1:28; 1 சாமுவேல் 30:8; அப்போஸ்தலர் 17:25

16 **சங்கீதம் 46:1 - ஆபத்தில் கர்த்தர் துணை**
**தியானத்திற்கு:** ஆதி. 49:25; 2 நாளா. 14:11,12; ஏசாயா 41:13,14; 50:9

17 **ஏசாயா 43:4 - கர்த்தர் உங்களை கனம்பண்ணுவார்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 18:30; 1 நாளா. 4:9,10; 29:11,12; யோவான் 12:26

18 **சங்கீதம் 84:5 - கர்த்தரே நம் பெலன்**
**தியானத்திற்கு:** யாத் 15:2; ஏசாயா 49:5; எரே. 16:19; எபே. 6:10

19 **1 சாமுவேல் 2:1 - கர்த்தருக்குள் இருதயம் களிகூரும்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 28:7; 33:21; செப். 3:14; சகரியா 10:7

20 **சங்கீதம் 145:18 - கர்த்தர் நம் கூப்பிடுதலைக் கேட்கிறார்**
**தியானத்திற்கு:** 2 நாளா. 13:14-16; மத். 20:29-34; லூக்கா 18:7,8

21 **எரேமியா 29:13 - தேவனை தேடும்போது கண்டுபிடிப்பீர்கள்**
**தியானத்திற்கு:** உபாகமம் 4:29; நீதிமொழிகள் 8:17; ஏசாயா 55:6

22 **சங்கீதம் 103:11 - கர்த்தருடைய கிருபை பெரியது**
**தியானத்திற்கு:** 1 இராஜா. 3:6; 2 நாளா. 1:8; சங்கீதம் 86:13; 117:2

23 **2 தீமோத்தேயு 2:21 - கனத்துக்குரிய பாத்திரம்**
**தியானத்திற்கு:** ஆதி. 41:38-44; அப். 9:15; 1 தீமோ. 5:17; எபி. 2:7

24 **எபேசியர் 1:12 - நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்**
**தியானத்திற்கு:** 2 நாளா. 29:11; ஏசாயா 41:9; மத். 20:16; யோவான் 15:16

25 **கலாத்தியர் 2:20 - விசுவாசத்தினால் பிழைப்பீர்கள்**
**தியானத்திற்கு:** ஆபகூக் 2:4; யோவான் 11:25; கலா. 3:11; எபி. 10:38

26 **லூக்கா 10:19 - ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தாது**
**தியானத்திற்கு:** சங். 121:6; ஏசாயா 27:3; தானி. 6:22; மாற்கு 16:18

27 **யூதா 24 - வல்லமையுள்ள தேவன்**
**தியானத்திற்கு:** உபா. 7:21; 1 நாளா. 29:11,12; 2 நாளா. 20:6; எபி. 5:7

28 **சங்கீதம் 40:2 - நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்**
**தியானத்திற்கு:** யோபு 33:11; சங். 37:23; 119:5; நீதி. 4:12; 20:24

29 **ரோமர் 5:2 - தேவனுடைய கிருபை**
**தியானத்திற்கு:** யாத். 33:19; எண். 6:25; ஏசாயா 54:10; புல. 3:32

30 **எபேசியர் 6:16 - விசுவாசம்**
**தியானத்திற்கு:** ஆதி. 15:1-6; தானி. 6:16-23; மாற்கு 9:17-27; யோவான் 5:24

31 **சங்கீதம் 73:26 - கர்த்தர் என் கன்மலை**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:2; சங். 62:2,6; ஏசாயா 26:4; 1 கொரி. 10:4




**இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்**

இணையதளம்: www.jesuscalls.org/ta/dpv
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்
ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல்: இணையதளத்தில் www.familychannel.org



# பார்வையற்றோர் மத்தியில் எஸ்தர் ஜெபக்குழு ஊழியம்

**ஸ்டெல்லா தினகரன்**

"அன்பின் அப்போஸ்தலனாகிய" சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்களுடைய 90ஆவது பிறந்த தினத்தில் ஜெப கோபுரத்தின் மூலமாக, கஷ்டப்படுகிற ஜனங்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்று சகோதரர் பால் தினகரன் அவர்கள் கொடுத்த அறிவிப்பின்படி, தூத்துக்குடி ஜெபகோபுர பணியாளர்கள் சகோதரி அனிதா பால்சன், சகோதரி ஜாஸ்மின் குணசிங் மற்றும் வேறு சில பெரியவர்களும் இணைந்து, சிலுவைப்பட்டி என்ற இடத்திலுள்ள Mercy Home for Blind என்ற முதியோர் இல்லத்திற்கு மதிய உணவு வழங்கும்படி சென்றிருந்தபொழுது, அங்கிருந்த கண் தெரியாத 18 சகோதரிகளிடம், நாங்கள் இயேசு அழைக்கிறார் ஊழியத்திலிருந்து வந்திருப்பதாகக் கூறியவுடன், அவர்கள் அனைவரும் இயேசு அழைக்கிறார் பாடலை எங்களோடு இணைந்து பாடினார்கள். அநேகர் பாளையங்கோட்டை பார்வையற்றோர் பள்ளியில் கல்வி பயின்றவர்கள். சிலர் திருநெல்வேலியில், சகோதரர் தினகரன் அவர்கள் நடத்திய கூடுகையில் பங்கு பெற்றவர்கள். ஆகவே, அவர்கள் நடத்திய கூடுகையில் உற்சாகமாக பங்கு பெற்றதுமன்றி, எஸ்தர் ஜெபக்குழுவில் இணைந்து ஜெபிப்பதற்கும் விருப்பம் தெரிவித்திருந்தார்கள். அதன் பொறுப்பாளராக இருக்கும் சகோதரி லூர்து பாக்கியம் அவர்களை அதிகமாக உற்சாகப்படுத்தியுள்ளார்கள். ஆகவே, 9.8.2025 அன்று, கர்த்தரின் சித்தப்படி, நானும், எஸ்தர் ஜெபக்குழு தலைவிகள் திருமதி அனிதா பால்சன் மற்றும் திருமதி மேரி ஜெபசிங் ஆகியோரும் இணைந்து எஸ்தர் ஜெபக்குழு கூடுகையை நடத்தினோம். கூடுகையில் கலந்துகொண்ட 18 கண் தெரியாத சகோதரிகளும் வெகு உற்சாகமாக பங்கு பெற்றனர். பாடல் வேளையில் கரங்களைத் தட்டி உற்சாகமாக எங்களோடு இணைந்து பாடினார்கள். ஜெபக்குறிப்புகள் கொடுக்கப்பட்டபொழுது, குறிப்புகளுக்கு ஏற்றவாறு அவர்கள் ஜெபங்களை ஏறெடுத்தது மிகவும் வல்லமையாக இருந்தது.

சகோதரி மரிய செல்வம் அவர்கள், 20-வது ஜெபக்குறிப்பு இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காகவும், ஃபேமிலி சேனல், இணையதளங்கள் மற்றும் ஜெப கோபுரங்கள் போன்ற ஊழியங்கள் ஒவ்வொன்றிற்காகவும் ஊக்கமாக ஜெபித்தார்கள். சகோதரி பரிபாலி அவர்கள் கன்னியாகுமரியை சேர்ந்தவர்கள். அவர்கள் அங்கிருந்தபோது, சகோதரர் தினகரன் நாகர்கோவிலில் நடத்திய கூடுகையில் கலந்துகொண்டதாகவும் கூறினார்கள். இப்படியாக அந்த சகோதரிகளில் அநேகர் இயேசு அழைக்கிறார் ஊழியத்தின்மீது அதிகம் பற்றுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள்.

இப்படிப்பட்ட அருமையான சகோதரிகளை சந்தித்து, எஸ்தர் ஜெபக்குழு கூடுகை நடத்துவதற்கான கிருபையைக் கொடுத்த நம் தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

**- சகோதரி பாலின் ஜோன்ஸ்,**
எஸ்தர் ஜெபக்குழு ஒருங்கிணைப்பாளர்,
தூத்துக்குடி.

**அருமையான சகோதரிகளே, நீங்களும் உங்கள் பகுதியில் எஸ்தர் ஜெபக்குழுவை ஆரம்பித்து, மற்ற சகோதரிகளுக்காக குழுவாகக்கூடி ஜெபிக்க முன்வரும்படி உங்களை அன்புடன் அழைக்கிறோம்.**

மேலும் விவரங்களுக்கு: சகோதரி ஸ்டெல்லா தினகரன், எஸ்தர் ஜெபக்குழு,
16, Dr. டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028.
மின்னஞ்சல்: epg@jesuscalls.org



# எஸ்தர் ஜெபக்குழு ஊழியம்

**கர்த்தருக்குள் அருமையானவர்களே!**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு கிருபையாக அருளிய எஸ்தர் ஜெபக்குழு ஊழியமானது, 1988-ம் ஆண்டு முதல் இந்நாள் வரையிலும் பல விதங்களில் பலுகிப் பெருகிக்கொண்டே வருகிறது. இதில், ஒவ்வொரு மாதமும் உண்மையான பாரத்தோடு, தங்களுக்கு கொடுக்கப்பட்ட உத்தரவாதத்தை உணர்ந்து, இந்த ஜெப சேவையில் ஈடுபடுகிறவர்கள் மிகவும் குறைவானவர்களேயாகும்! எனினும், அவர்கள் கர்த்தருக்கு முன்பாக உண்மையோடும், மனஉத்தமத்தோடும் தங்கள் பணியை திறம்பட நடத்தி வருகிறதை கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, நிச்சயம் கர்த்தருடைய தெய்வீக ஆசீர்வாதம் அவர்கள்மீது பெரிதாயிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" (நீதிமொழிகள் 28:20) என்றபடியே, கர்த்தர் தாமே தமது வார்த்தையின்படி, அவர்களுடைய **உண்மையினிமித்தம்** தம்முடைய பரிபூரண ஆசீர்வாதங்களை அவர்களது வாழ்வில் அளவில்லாமல் அருளிச் செய்வாராக!

இந்த நிலையில், கண்கள் தெரியாத சில சகோதரிகள் சமீபத்தில் ஒன்றாக இணைந்து, இந்த ஜெப ஊழியத்தில் பங்கெடுத்து, அந்த சாட்சியை புகைப்படத்துடன் எனக்கு அனுப்பியிருப்பது என் உள்ளத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியையும், பேரானந்தத்தையும் அருளியிருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் கண்கள் நன்றாகத் தெரிந்த பலரோ, **இந்தவிதமான ஜெப ஊழியத்தை அலட்சியம் செய்து, வீட்டில் உறங்கிக் கொண்டு, காலத்தை இருளில் செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள்**. இதை கவனிக்கும்பொழுது,

> **"உங்களுக்கு கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவுகூராமலுமிருக்கிறீர்களா?"** (மாற்கு 8:18)

என்ற வசனம்தான் என் நினைவுக்கு வருகிறது.

அன்பு சகோதரியே! தாயாரே! வாலிப மகளே! சிறிய மகளே! மற்றும் தம்பதியரே! நீங்கள் அவ்வாறு ஊழியத்தை நடத்த விருப்பமின்றி உறங்கிக்கொண்டிருக்கிறீர்களா? அல்லது உயிர்ப்பிக்கப்பட்டவர்களாக உன்னதரின் ஊழியத்தில் பாரத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இதை ஆழமாக சிந்தித்து, கர்த்தருக்கென்று வைராக்கியமாக எழும்பி செயல்படுங்கள்! கடைசி நாட்கள் நெருங்குகிறது! கிறிஸ்துவுக்காக ஒளிவீசிப் பிரகாசிக்க பயபக்தியோடு எழும்பி வாருங்கள் (ஏசாயா 60:1-3).

**கண்ணீரோடு வேண்டிக்கொள்ளும்,**
**உங்கள் அன்புள்ள தாயார்,**
**திருமதி. ஸ்டெல்லா தினகரன்.**

---

## எஸ்தர் ஜெபக்குழுவில் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தினால் நடந்த அற்புத சாட்சி!

### கடன் பிரச்னையிலிருந்து விடுதலை



நான் எஸ்தர் ஜெபக்குழு தலைவியாக இருக்கிறேன். நாங்கள் ஒரு இடம் வாங்குவதற்காக பணம் தேவைப்பட்டது. ஆகவே, அதற்காக நாங்கள் கடன் வாங்கினோம். என் கணவர் ஓய்வு பெற்றவர். என்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் சரியான வேலை இல்லாதபடியினால், வருமானம் எதுவுமின்றி இரண்டு வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம். எங்களால் வட்டிகூட கட்ட முடியவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில், எஸ்தர் ஜெபக்குழுவில் இந்த காரியத்திற்காக நாங்கள் கூடி ஒருமனப்பட்டு ஜெபித்தோம். ஆண்டவர் மனமிரங்கி, அற்புதமாய் பணம் கிடைக்க உதவி செய்து, கடன் பிரச்னையிலிருந்து எங்களுக்கு பூரண விடுதலையைக் கட்டளையிட்டார். அதோடு கூட, வேலையில்லாமல் இருந்த என் மகளுக்காகவும் எங்கள் குழுவில் ஜெபித்தோம். கர்த்தர் அவளுக்கும் நல்ல வேலையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். இந்த அற்புதங்களை எங்கள் வாழ்வில் நடப்பித்த ஆண்டவருக்கே சகல துதி ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறேன். – **திருமதி. மெர்ஸி ராஜா,** திருவள்ளூர்.

# என் தந்தை மறைந்துவிட்டார்

என் தந்தை காலமான பிறகு, என் பாட்டி என்னை இளம் பங்காளர் திட்டத்தில் சேர்த்தார்கள். தேவ கரம் என்மேல் வந்தது. நான் படிப்பில் சிறந்து விளங்கினேன். பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றேன். பின்னர், பி.ஏ., மற்றும் எம்.ஏ., படிப்பை தங்கப் பதக்கத்துடன் முடித்தேன். இப்போது வேலை



பார்க்கிறேன்; என் கிராமத்திலுள்ள பிள்ளைகளுக்கு சேவை செய்கிறேன். தேவன் எளிய பின்னணியிலிருந்து என்னை உயர்த்தி, தம் மகிமைக்காக பிரகாசிக்கும்படி செய்துள்ளார்.

– கவிபிரியா.

# உங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற்கென ஜெப வெகுமதி



அனைத்து பெற்றோரும் தங்கள் பிள்ளைக்கென நம்பிக்கையும் நோக்கமும் தெய்வீக பாதுகாப்பும் நிறைந்த எதிர்காலத்தை கனவாக கொண்டிருப்பர். நிச்சயமற்ற இன்றைய உலகில் பிள்ளையை உறுதியான விசுவாசத்திலும் பக்திக்கேற்ற இயல்பிலும் வளர்ப்பது முக்கியமாகும். அதற்காகவே இயேசு அழைக்கிறார், இளம் பங்காளர் திட்டத்தை அளிக்கிறது. பிறந்ததிலிருந்து 23 வயது வரைக்கும் தினசரி ஜெபித்து கிறிஸ்துவின் மகிமைக்கேற்ற, அர்ப்பணிப்புள்ள ஒரு தலைமுறையை எழுப்பும் திட்டமே இளம் பங்காளர் திட்டமாகும்.

இந்தத் திட்டம் உங்கள் பிள்ளையின் வாழ்வில் நீங்கள் செய்யக்கூடிய ஆவிக்குரிய முதலீடாகும். அவர்களுடைய ஆரம்ப காலம் முதல் கல்லூரி காலம் வரைக்கும் விசுவாசத்தில் வளரவும், தேவனுடைய வழிகளில் நடக்கவும், அவருடைய தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றவும் அவர்களுக்காக ஜெபிப்போம்.

ஒரு பெற்றோராக, தாத்தா, பாட்டியாக, பாதுகாவலராக உங்கள் பிள்ளையை இத்திட்டத்தில் இணைத்து கீழ்க் காண்பவற்றுக்கு அடித்தளமிடலாம்.

- கனி நிறைந்த வாழ்வு: யோவான் 15:16ன் அடிப்படையில், படிப்பு, குணம் மற்றும் உறவுகளில் நற்பலன்களை தந்திட ஜெபிப்போம்.
- திடமான விசுவாசம்: சிறிய சாமுவேலைப்போல (1 சாமுவேல் 3:10) உங்கள் பிள்ளை தேவனுடைய சத்தத்தை கேட்டு இன்றைய உலகில் சாட்சியாக நிற்கும்படி ஜெபிப்போம்.

## இளம் பங்காளர் திட்டத்தின் சிலாக்கியங்கள்:

- தினமும் இளம் பங்காளர்களின் பெயர்களை உச்சரித்து ஜெப வீரர்கள் ஜெபிப்பார்கள்.
- பிறந்தநாளின்போது சிறப்பு ஜெபம்
- மாதந்தோறும் சகோ. சாமுவேல் தினகரனின் ஆசீர்வாத செய்தி
- காருண்யா பல்கலைக்கழகத்தில் கல்வி ஊக்கத்தொகை

**இன்றே உங்கள் பிள்ளையை இதில் இணைத்திடுங்கள்**

ஜெபத்தால் பாதுகாப்பு அரண் அமைத்திடுங்கள்

நன்கொடை செலுத்துவதற்கான இணைப்பு: www.jesuscalls.org/donate/YPP

மின்னஞ்சல்: ypp@jesuscalls.org

அருகில் இருக்கும் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தையும் அணுகலாம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்: 98409 00477

DONATE TO YPP



Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest

SEESHA
LET'S GIVE LIFE

**ஸ்தாபகர் Dr. பால் தினகரனின் 63வது பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. கொண்டாட்டத்தில் இடம்பெற்ற சீஷாவின் சில முக்கிய நிகழ்வுகள்:**

- சீஷாவின் 6 கற்றல் மையங்கள் தொடங்கப்பட்டன. இந்தியா முழுவதும் செயல்படும் மையங்களின் எண்ணிக்கை 63 ஆக உயர்ந்தது.
- இலவசமாக உணவு வழங்கப்பட்டது. இலவச மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டன.
- திக்கற்றோருக்கு புத்தாடைகளும், நலிவுற்ற குடும்பத்தினருக்கு சமையல் பொருள்களும் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன.




# ஸ்தாபகரின் நோக்கத்தோடுகூடிய பிறந்தநாள் விழா



### நலிவிலிருந்து தற்சார்பு வாழ்க்கைக்கு

சீஷாவின் திறன் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான பெண்களை திடப்படுத்துகின்றன. இவர்களுள் பெரும்பாலான பெண்கள் உடைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக, மதுப்பழக்கமுள்ள கணவரை உடையவர்களாக, கொடிய வறுமையில் வாடுகிற வர்களாக, பிள்ளைகளை தாம் மட்டுமே வளர்க்கிற வர்களாக இருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு சீஷா இந்தியா முழுவதும் உள்ள 9 மையங்களில் 521 நலிவுற்ற பெண்களுக்கு தையற்பயிற்சியும், 105 பேருக்கு சணல் பொருள்கள் தயாரிப்பு பயிற்சியும் அளித்தது. அவர்களில் பலர் இப்போது வேலை பார்க்கிறார்கள்; சொந்தமாக தொழில் செய்கிறார்கள்; அடுத்த அணியினருக்கு பயிற்சி கொடுக்கிறார்கள். நலிவுற்ற நிலையிலிருந்து தற்சார்பு நிலைக்கு உயர்ந்த அந்தப் பெண்கள், இப்போது சொந்தக் காலில் நிற்கிறார்கள்; தங்கள் குடும்பத்தை தாங்கவும் செய்கிறார்கள்.

### பிரகாசமான எதிர்காலம்



என்னுடைய கணவர் குறைந்த வருமானத்திற்கு வேலை செய்கிறார். நான் வீட்டிலேயே இருந்ததால் தினசரி செலவுகளையும் பிள்ளைகளை பராமரிக்கவும் வருமானம் போதாமல் அல்லல்பட்டேன். சீஷா எனக்கு தையற்பயிற்சி அளித்து, தொழில் தொடங்க பணமும் (seed money) அளித்தது. சீஷாவின் உதவியால் தற்போது சென்னை அரும்பாக்கத்தில் சொந்தமாக தையல் கடை வைத்திருக்கிறேன். இப்போது மாதம் ரூ.18,000 வருமானம் ஈட்டி, என் குடும்பத்தை தாங்குவதுடன், பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் சேமிக்கிறேன். உண்மையிலேயே சீஷா வாழ்க்கைகளை மறுரூபமாக்குகிறது. - திருமதி. அமலா, திறன்மேம்பாட்டு பயனாளி, சென்னை.

**வாழ்வாதாரம் அளிக்கும் பணியில் எங்களோடு இணைந்திடுங்கள்:**

- புதிதாக தையற்பயிற்சி மையம் தொடங்குவதற்கு ரூ.1,00,000/-
- தொழில் செய்யக்கூடிய தையல் இயந்திரம் ஒன்றை கொடுக்க ரூ.12,000/-
- தையற் பயிற்றுநருக்கு ஒரு மாத கௌரவ ஊதியம் ரூ.10,000/-
- இந்தப் பணிக்கு உதவ நீங்கள் எந்தத் தொகையும் அளிக்கலாம்

ALL DONATIONS ARE TAX-EXEMPTED UNDER SECTION 80G

DONATE TO SEESHA

UPI ID : 9384015155@okbizaxis

UPI: G Pay, PhonePe, Paytm, UPI, pay
Wallets: OLA MONEY, freecharge, MobiKwik, JioMoney

You can also donate through: https://seesha.app

044 66660000
+91 9300 600 600

www.seesha.org
info@seesha.org

* When you Donate send the Details to +91 9300 600 600

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418


# Karunya

DEEMED UNIVERSITY

SOLVING HUMAN PROBLEMS

NAACAccredited A++



**Dr. Paul Dhinakaran**

Chancellor, Karunya University

# 40th YEAR OF EXCELLENCE

600+ MILLION FUNDED PROJECTS

185+ PATENTS

85+ COUNTRIES INTERNATIONAL INTERNSHIPS

10 CRORES IN SCHOLARSHIPS FOR DESERVING STUDENTS EVERY YEAR

**Accreditation**

NAAC A++ Grade · NBA Engineering and Management Programs · ACCA B. Com and Management Programs · B.Sc. (Hons.) Agriculture Program

**India Rating**

QS I-GAUGE PLATINUM

**Global Ranking**

THE World University Rankings 2025 1201-1500 Band

CATEGORY 1 Institution UGC GoI.

Highest CTC of 71 LAKHS per annum

**Academic Collaborations**

AMARON · Google · PHOENIX Phoenix Medical Systems (P) Ltd. · suez · edveon · FESTO · Microbiological Laboratory · ZOHO

**Innovation Partnership**

iitm research park

இந்திய தொழில்நுட்ப கழகம் சென்னை ஆராய்ச்சி மன்றில்

**International Collaborations**

**North America**

GW · Lewis University · CityUniversity of Seattle · Saint Peter's University · SMU · WPI · University of Evansville

**United Kingdom**

UWE Bristol University of the West of England · University of Salford Manchester · Leeds Beckett University

**Asia**

Woosong University · METU · Jalikbanov University · Tokat Gaziosmanpaşa Üniversitesi · Tzu Chi University

**Oceania**

ACU Australian Catholic University

**Europe**

Universitatea Lucian Blaga din Sibiu · Universitat d'Alacant Universidad de Alicante · Bordeaux INP · b-tu Brandenburgische Technische Universität Cottbus - Senftenberg · Università Cattolica del Sacro Cuore · isep · UCAM Universidad Católica de Murcia · IBSU · AGH · Universidad de Jaén · ECE Paris École d'Ingénieurs · ESTACA · Universida de Vigo · Vilnius University · Vincent Pol University · Georgian Aviation University

**Middle East**

Technion Israel Institute of Technology · Ben-Gurion University of the Negev · Bar-Ilan University · The Hebrew University of Jerusalem · Skyline University College · Tel Aviv University

**PROGRAMS OFFERED :**

Engineering / Agriculture / Management / Commerce / Forensic Science / Digital Forensics / Physical Sciences / Media / Online MBA / Artificial Intelligence / Health Sciences

## Karunya Institute of Technology and Sciences

Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.

E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu • Toll Free: 1800 88 99 888, 1800 42 54 300

For more details contact: **94425 03407, 94425 03422**